# நடப்பு நிகழ்வுகள் - செப்டம்பர் 01-30, 2024



| வ.எண். | தலைப்புகள் | பக்க எண். |
| --- | --- | --- |
| 1 | தமிழ்நாடு | 3 |
| 2 | மாநிலங்கள் | 10 |
| 3 | தேசிய நிகழ்வுகள் | 12 |
| 4 | திட்டங்கள் | 17 |
| 5 | நீதிமன்ற தீர்ப்புகள் | 22 |
| 6 | சர்வதேச நிகழ்வுகள் | 23 |
| 7 | மாநாடுகளும் உச்சி மாநாடுகளும் | 24 |
| 8 | பாதுகாப்பு | 31 |
| 9 | பொருளாதாரம் | 35 |
| 10 | நியமனங்கள் | 37 |
| 11 | விருதுகள் | 39 |
| 12 | புகழ்பெற்ற ஆளுமைகள் | 40 |
| 14 | புத்தகங்களும் ஆசிரியர்களும் | 41 |
| 15 | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் | 42 |
| 16 | விளையாட்டுகள் | 47 |
| 17 | நினைவில் நின்றவர்கள் | 51 |
| 18 | தரவரிசைப் பட்டியல் | 52 |
| 19 | முக்கிய தினங்கள் | 55 |
| 20 | இதர பொருட்கள் | 59 |
| 21 | நடப்பு நிகழ்வுகள் - த.நா.அ.ப.தே – அசல் கேள்விகள் மற்றும் விடைகள் - ஜூலை மற்றும் செப்டம்பரில் நடத்தப்பட்ட தேர்வுகள் | 60 |

# தமிழ்நாடு

- **அமெரிக்காவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனம் தமிழ்நாட்டில் 400 கோடி ரூபாயை முதலீடு செய்ய உள்ளது.**



**US firm to set up gigafactory in Chengalpattu**

*The Rs 400-crore green hydrogen plant would generate employment for 500 people*

**CHENNAI: The high-level delegation led by Chief Minister MK Stalin bagged yet another investment during its trip to the US, inking a Rs 400-crore deal with US-based Ohmium to set up a new green hydrogen and electrolyser gigafactory in Chengalpattu.**

The MoU with Ohmium co-founder and CEO Arne Ballantine in San Francisco was exchanged in the presence of Chief Minister Stalin, who is currently touring the United States along with Industries Minister TRB Rajaa and senior officials to attract investments to the State.

"We've secured a Rs 400 crore investment from Ohmium in Chengalpattu, creating 500 jobs. This marks a significant step in nurturing the ecosystem for green energy production and fuelling a sustainable future," Stalin said in a social media post.

Ohmium is a green hydrogen com-

Explaining the details of the gigafactory, a source said it would break water into hydrogen and oxygen using renewable energy, enabling the production of green hydrogen, which is widely considered as the pollution-free fuel of the future. It is industry-agnostic and will facilitate India's transition to clean energy.

Meanwhile, Stalin would leave for Chicago from San Francisco on September 2. "All arrangements are on to

**Chief Minister MK Stalin at the MoU signing function in San Francisco**

- ✓ அமெரிக்க புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனமான ஓமியம் (Ohmium), 400 கோடி முதலீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்யவும், எலக்ட்ரோலைசர்களை தயாரிக்கவும் ஒரு யூனிட்டை அமைக்கவுள்ளது.
- ✓ இந்த அலகு 500 வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- **அண்ணா பல்கலைக் கழகம் புதுமையான ட்ரோன் தொழில்நுட்பத்திற்கான காப்புரிமையை பெற்றுள்ளது**
- ✓ சென்னை, அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி ஆராய்ச்சியாளர்கள், ஆளில்லா விமான செயல்பாடுகளில் புதிய சகாப்தத்தைப் படைக்கும் என்று கருதப்படும் புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளனர்.



- ✓ இந்திய அறிவுசார் சொத்துரிமை அமைப்பின் இந்திய காப்புரிமை அலுவலகம், ஆளில்லா வான்வழி வாகனங்களுக்கான வான்வழி அடிப்படையிலான அறிவார்ந்த தன்னாட்சி தரையிறங்கும் அமைப்புக்கான காப்புரிமையை வழங்கியுள்ளது.

- ➢ **ஃபார்ச்சூன் 500 (Fortune 500) நிறுவனம் தமிழ்நாட்டில் உலகளாவிய திறன் மையத்தை அமைக்க உள்ளது**
- ✓ ஃபார்ச்சூன் 500இன் காப்பீடு மற்றும் நிதி நிறுவனமான அஷ்யூரண்ட் (Assurant), சென்னையில் உலகளாவிய திறன் மையத்தை அமைக்க உள்ளது.



- ✓ இந்த நிறுவனம் மற்றும் தமிழ்நாடு வழிகாட்டுதல் நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையே சிகாகோவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- ✓ அட்லாண்டாவைத் தலைமையிடமாகக் கொண்ட இந்த நிறுவனம் பேரிடர் மேலாண்மை தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குகிறது.

- ➢ **காற்றாலை மின் திட்டங்களுக்கான மறுசீரமைப்பு, புதுப்பித்தல் மற்றும் ஆயுள் நீட்டிப்புக் கொள்கையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது**
- ✓ உற்பத்தியாளர்கள் பழைய காற்றாலை விசையாழிகளை மாற்றுவதற்காகவும், காற்றாலை ஆற்றல் வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காகவும், தமிழ்நாடு காற்றாலை மின் திட்டங்களுக்கான மறுசீரமைப்பு, புதுப்பித்தல் மற்றும் ஆயுள் நீட்டிப்புக் கொள்கை - 2024ஐ வெளியிடப்பட்டுள்ளது.




- ✓ 30 ஜூன் 2024 நிலவரப்படி 22,754 மெகாவாட் கணிசமான புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறனைக் கொண்ட தமிழ்நாடு, இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. தொழில்துறை

வல்லுநர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட கொள்கையின்படி, 10,790 மெகாவாட் காற்றாலை மின்சாரமானது மாநிலத்தின் புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் பெரும்பங்களிப்பை வழங்குகிறது.

- **தமிழ்நாடு அரசு இணைய பாதுகாப்புக் கொள்கை 2.0**




- ✓ தமிழக அரசால் சமீபத்தில் வெளியிடப்பட்ட இணைய பாதுகாப்புக் கொள்கை 2.0 ஆனது, வழிகாட்டுதல்கள், தணிக்கைக்கான நிலையான செயல்பாட்டு வழிமுறைகள், இணைய அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்களுக்கு தயாராக இருத்தல் ஆகியவற்றின் ’மூலம் அரசின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளைப் பட்டியலிட்டுள்ளது.
- ✓ தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையால் வெளியிடப்பட்ட இந்த ஆவணமானது, மின் கையொப்பம்-டிஜிட்டல் கையொப்ப சான்றிதழ், மின்னஞ்சல் பாதுகாப்பு, கடவுச் சொல் கொள்கை, சமூக ஊடகக் கொள்கை, காப்பு மற்றும் மீட்பு மற்றும் தகவல் பாதுகாப்புத் தணிக்கை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

- **<u>நீர்ப்பாசன ஏரிகளுக்குப் புத்துயிர் அளிப்பதற்காக தமிழ்நாடு அரசு 500 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது</u>**
- ✓ கிராமப்புறங்களில் உள்ள 5000 சிறு பாசன குளங்களைப் புதுப்பிப்பதற்காக 500 கோடி ரூபாய்க்கான திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது



- ✓ இந்தத் திட்டம் நீர் சேமிப்பை மேம்படுத்துதல் மற்றும் உள்ளூர் நீர் ஆதாரங்களை நிர்வகித்தல், குறிப்பாக விவசாயத்திற்கான நீர் ஆதாரங்களை நிர்வகித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ✓ இந்தத் திட்டத்திற்கு மாநில பட்ஜெட்டிலிருந்து ரூபாய் 250 கோடியும், கூடுதலாக மாநில நிதி ஆணையத்தின் மானியமாக 250 கோடியும் கிடைக்கும்.
- ✓ தமிழ்நாட்டில் சுமார் 22,051 சிறு பாசன ஏரிகளும் 69,777 குளங்கள் அல்லது ஊரணிகளும் (பாரம்பரிய நீர் சேமிப்பு அமைப்புகள்) உள்ளன.

## ➢ தமிழ்நாடு நீரேற்று சேமிப்புத் திட்டக் கொள்கை (Tamil Nadu Pumped Storage Projects Policy), 2024

- ✓ காற்றாலை மற்றும் சிறு நீர் மின் திட்டங்களுக்கான கொள்கைகளைப் பின்பற்றி, மாநில அரசு ‘தமிழ்நாடு நீரேற்று சேமிப்புத் திட்டக் கொள்கை 2924’ஐ சனிக்கிழமை அறிமுகப்படுத்தியது.



- ✓ இந்தக் கொள்கையானது, அதன் நோக்கங்களின் ஒரு பகுதியாக, பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்குக் கவர்ச்சிகரமான முதலீட்டுச் சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதில் தெளிவான ஒழுங்குமுறை கட்டமைப்புகள், நிதி ஊக்கத் தொகைகள் மற்றும் முதலீடுகளுடன் தொடர்புடைய அபாயங்கள் மற்றும் நிச்சமயற்ற தன்மைகளைக் குறைப்பதற்கான நெறிப்படுத்தப்பட்ட ஒப்புதல் செயல்முறைகள் ஆகியவை அடங்கியுள்ளன.
- ✓ நீரேற்று சேமிப்புத் திட்டங்கள் குறைந்த தேவைக் காலங்களில் அதிகப்படியான புதுப்பிக்கத்தக்க ஆற்றலைச் சேமித்து, உச்சக் காலங்களில் விநியோகிக்கும் திறன் காரணமாக ஆற்றல் மாற்றத்திற்கு முக்கியமாக விளங்குகின்றன.

## ➢ தமிழ்நாடு அரசு கேட்டர்பில்லர் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது

- ✓ அமெரிக்க இயந்திர உற்பத்தி நிறுவனமாகிய கேட்டர்பில்லர் தனது கருவிகள் உற்பத்தி செய்யும் வசதியை தமிழகத்தில் அமைக்கவுள்ளது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் அமெரிக்க பயணத்தின்போது, இளைஞர்களுக்கான திறன் மேம்பாடு மற்றும் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் மற்றும் புத்தொழில்களை ஆதரிப்பதற்காக ஆட்டோடெஸ்க் உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.




- ✓ திருச்சிராப்பள்ளியில் ஜபில் நிறுவனத்தின் ரூ.2000 கோடி முதலீடு 5000 வேலைவாய்ப்புகளை உருவாக்கும். அத்துடன் புதிய மின்னணு உற்பத்தி தொகுப்பையும் உருவாக்கும்.
- ✓ உற்பத்தி அலகு மேம்பாட்டிற்காக டிரில்லியண்ட் நிறுவனத்துடன் ரூ.2000 கோடிக்கான புரிந்தணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. நோக்கியா, பேபால், யீல்டு எஞ்சினியரிங் சர்வீசஸ், மைக்ரோசிப், இன்பினிக்ஸ் ஹெல்த்கேர் மற்றும் அப்ளைடு மெட்டீரியல்ஸ் உடனான ஒப்பந்தங்களும் இறுதி செய்யப்பட்டன.
- ✓ இந்த ரூ.900 கோடி முதலீடுகள் மாநிலத்தில் 4100 வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

➢ **சிந்து சமவெளி நாகரிகம்: முதலமைச்சர் சர் ஜான் மார்ஷலை வாழ்த்தினார்**

- ✓ தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், சிந்து சமவெளி நாகரிகத்தின் கண்டுபிடிப்பு குறித்து மறைந்த ஆங்கிலேய தொல்பொருள் ஆய்வாளராகிய சர் ஜான் மார்ஷலை வெள்ளிக்கிழமை அன்று பாராட்டினார்.



- ✓ ஒரு சமூக ஊடகப் பதிவில், திரு. ஸ்டாலின, சரியாக 100 ஆண்டுகளுக்கு முன்பு, மறைந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் 'இந்திய துணைக் கண்டத்தின் வரலாற்றை மறுவடிவமைக்கும்' சிந்து சமவெளி நாகரிகத்தின் கண்டுபிடிப்பை அறிவித்தார் என்று செப்டம்பர் 20, 1924 அன்று நினைவு கூர்ந்தார்.

➢ **செஞ்சிக் கோட்டை, உலக பாரம்பரிய தள அடையாளச் சின்னத்திற்காக பரிந்துரைக்கப்பட்டது**

- ✓ யுனெஸ்கோ குழு செஞ்சிக் கோட்டையைப் பார்வையிட உள்ளது. இது செப்டம்பர் 27 அன்று உலக பாரம்பரிய சின்னத்திற்காகப் பரிந்துரைக்கப்பட்டது.



- ✓ சர்வதேச நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்களுக்கான ஆணையத்தின் (International Commission on Monuments and Sites) நிபுணர் உட்பட ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் (யுனெஸ்கோ) குழு ஒன்று, செஞ்சிக் கோட்டையைப் பார்வையிட உள்ளது. இந்தக் குழு, 2024-25ஆம் ஆண்டிற்கான உலக பாரம்பரிய சின்னத்திற்காக மராட்டிய இராணுவ நிலப்பரப்புகளை உருவாக்கும் 11 கோட்டைகளுடன் ஒன்றிய அரசால் பரிந்துரைக்கப்பட்ட செஞ்சி கோட்டையையும் பார்வையிட உள்ளது.

➢ **டெல்டா பிராந்தியத்தில் முதல் மினி டைடல் பூங்கா அமைய உள்ளது**

- ✓ தமிழ்நாடு அரசு இரண்டு மினி டைடல் பூங்காக்களைத் திறக்க உள்ளது – ஒன்று தஞ்சாவூரிலும் இன்னொன்று சேலத்திலும் அமையவுள்ளது. அவற்றை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைப்பார்.




- ✓ டெல்டா பிராந்தியத்தின் முதல் டைடல் பூங்காவாகிய தஞ்சாவூர் மினி டைடல் பூங்கா 30.50 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.
- ✓ பிள்ளையார்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள இந்தப் பூங்கா 55,000 ச.அடியில் மூன்று தளங்களைக் கொண்டுள்ளது.
- ✓ சேலத்தில் 29.50 கோடி செலவில் மினி டைடல் பூங்கா கட்டப்பட்டுள்ளது.

➢ **தமிழ்நாடு சதுப்புநில இயக்கம் (Tamil Nadu Wetlands Mission)**

- ✓ இந்தப் பகுதியில் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன், இராமநாதபுரத்தில் மேலும் இரண்டு பறவைகள் சரணாலயங்களை அமைப்பதற்காக, தமிழ்நாடு சதுப்புநில இயக்கம், ராம்சார் அங்கீகாரத்தை வழங்க உள்ளது.



- சதுப்பு நிலங்களின் பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாட்டிற்கான சர்வதேச ஒப்பந்தமான ராம்சார் ஒப்பந்தத்தின்கீழ், இந்த அங்கீகாரம் வழங்கப்படுகிறது. இராதநாதபுரத்தில் தேர்த்தங்கல், சக்கரக் கோட்டை, மேலசெல்வனூர்-கீழ செல்வனூர், காஞ்சிரங்குளம், சித்திரங்குடி ஆகிய ஐந்து பறவைகள் சரணாலயங்கள் உள்ளன.
- சித்திரங்குடி மற்றும் காஞ்சிரங்குளம் சரணாலயங்கள் முறையே 2021 மற்றும் 2022இல் ராம்சார் அந்தஸ்தைப் பெற்றன.
- தமிழ்நாட்டில் தற்போது 18 ராம்சார் தளங்கள் உள்ளன. இது இந்தியாவிலேயே மிகவும் அதிகமாகும்.

- **தமிழ்நாட்டில் இப்போது 50 சிப்காட் தொழில்பூங்காக்கள் உள்ளன.**
- டாடா மோட்டார்ஸ் மற்றும் ஜேஎல்ஆர் திட்டத்துடன் இணைந்து ராணிப்பேட்டை நகரத்திற்கு அருகில் உள்ள பணப்பாக்கத்தில் தமிழ்நாட்டின் 50வது சிப்காட் தொழில்பூங்கா நேரலையில் தொடங்கி வைக்கப்பட உள்ளது.




- தமிழ்நாடு மாநில தொழில்கள் மேம்பாட்டுக் கழகம் (சிப்காட்) வழங்கிய தரவுகளின்படி, தருமபுரியில் அடகபாடி, தூத்துக்குடியில் அல்லிகுளம், விருதுநகரில் இ. குமாரலிங்கபுரம், கிருஷ்ணகிரியில் நாகமங்கலம் மற்றும் திருவண்ணாமலையில் மேல்மா ஆகிய இடங்களில் பெரிய அளவிலான புதிய தொழில்பூங்காக்கள் அமைக்கப்பட உள்ளன.

# மாநிலங்கள்

## ➢ அபராஜிதா (Aparajita) மசோதா

✓ மேற்கு வங்க சட்டமன்றம் 'அபராஜிதா பெண்கள் மற்றும் குழந்தை மசோதா (மேற்கு வங்க குற்றிவயல் சட்டங்கள் மற்றும் திருத்தம்) 2024-ஐ நிறைவேற்றியுள்ளது. இது பாலியல் குற்றங்களுக்கு எதிரான மாநிலத்தின் சட்ட கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் குறிப்பிடுகிறது.




✓ இந்த மசோதா, கற்பழிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் செயல்களால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு மரணம் ஏற்பட்டாலோ அல்லது அவளை ஆதரவின்றி விட்டுச் சென்றாலோ அவர்களுக்கு மரண தண்டனை விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

✓ இந்த நடவடிக்கை மூலம் கற்பழிப்பு, கூட்டு பலாத்காரம் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்பான மத்திய சட்டங்களைத் திருத்திய முதல் மாநிலமாக மேற்கு வங்காளம் திகழ்கிறது.

✓ கடந்த மாதம் ஆர்ஜிகர் மருத்துவ மையம் மற்றும் மருத்துவமனையில் 31 வயது பயிற்சி மருத்துவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிலையில் அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்த மசோதாவிற்கு 'அபராஜிதா' என்று பெயரிடப்பட்டுள்ளது.

## ➢ உலகின் முதல் ஆசிய கழுகு அரசன் பாதுகாப்பு மையம்

✓ செப்டம்பர் 6, 2024 அன்று, உத்தரப் பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் கோரக்பூர் வனப் பிரிவின் கேம்பியர்கஞ்ச் மலைத் தொடரின் பரிவைசியில் ஜடாயு பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க மையத்தைத் திறந்து வைத்தார்.



- ✓ இந்த அற்புதமான வசதியானது வனவிலங்கு பாதுகாப்பில் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லைக் குறிக்கிறது. இது சிவப்பு தலை கழுகு என்றும் அழைக்கப்படும் ஆசிய கழுகு அரசனுக்கான உலகின் முதல் அர்ப்பணிக்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க மையமாக விளங்குகிறது.

### ➢ கோவா கடல்சார் சிம்போசியம் 2024

- ✓ இந்திய கடற்படையானது, கோவா கடல்சார் சிம்போசியம் 2024இன் ஐந்தாவது பதிப்பை செப்டம்பர் 23முதல் 24 வரை கோவாவின் கடற்படைப் போர் கல்லூரியின் கீழ் நடத்தியது..




- ✓ புதிதாகத் திறக்கப்பட்ட சோழா் கட்டிடத்தில் இந்த ஆண்டின் கருப்பொருள், 'ஐஓஆர்-ல் உள்ள பொதுவான கடல்சார் பாதுகாப்பு சவால்கள் - சட்ட விரோதமான புகாரளிக்கப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தல் மற்றும் பிற சட்ட விரோத கடல்சார் நடவடிக்கைகள் போன்ற மாறுகின்ற அச்சுறுத்தல்களைத் தணிப்பதற்காக முயற்சியின் முன்னேற்றக் கோடுகள்' என்பதாகும்.

# தேசிய நிகழ்வுகள்

➢ **இந்திய அரசு அக்ரிடெக் புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்காக 'அக்ரிசூர்' (AgriSure) நிதியைத் தொடங்குகிறது**

✓ இந்திய அரசு அக்ரிடெக் புத்தொழில் நிறுவனங்களை ஆதரிப்பதற்காக 750 கோடி ரூபாய் (சுமார் 90 மில்லியன் டாலர்) நிதியத்தை அக்ரிசூர்' என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது.




✓ இந்த நிதியமானது வேளாண் துறையில் உள்ள புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் வேளாண்மையாளர்களுக்கு ஈக்விட்டி மற்றும் கடன் மூலதனம் ஆகிய இரண்டிலும் நிதி உதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இந்த அக்ரிசூர் உடன், ஒன்றிய அரசு கிரிஷிநிவேஷ் (**KrishiNivesh**) என்ற ஒரு ஒருங்கிணைந்த வேளாண் முதலீட்டுப் போர்ட்டலையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

✓ மத்திய மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்கள் குறித்த தகவல்களை எளிதாகக் கிடைக்கச் செய்வதன்மூலம் விவசாயிகள், தொழில்முனைவோர் மற்றும் தொழில்நிறுவனங்கள் போன்ற பல்வேறு பங்குதாரர்களுக்குச் சேவை செய்யும் வகையில் இந்தப் போர்ட்டல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

➢ **மல்டிட்ரக்-எதிர்ப்பு காசநோய்க்கான புதிய சிகிச்சை முறை (New Treatment Regimen for Multidrug-Resistant TB)**

✓ இந்தியாவில் பல மருந்துகளை எதிர்க்கும் காசநோய்க்கான புதிய சிகிச்சை முறையை அறிமுகப்படுத்த ஒன்றிய சுகாதார அமைச்சம் வெள்ளிக்கிழமை அன்று ஒப்புதல் அளித்துள்ளது.



- ✓ பெடாகுலைன், ப்ரீடோமானிட், லைன்சோலிட் மற்றும் மோக்ஸிப்ளோக்சசின் (Bedaquiline, Pretomanid, Linezolid, and Moxifloxacin) ஆகிய நான்கு மருந்துகளைக் கொண்ட BPaLM முறையானது, முந்தைய எம்டிஆர்-டிபி சிகிச்சை முறையைவிட பாதுகாப்பானது, மிகவும் பயனுள்ளது மற்றும் விரைவான சிகிச்சை விருப்பமாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று ஒன்றிய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## ➢ ரங்கீன் மச்லி செயலி (Rangeen Machhli App)

- ✓ 'ரங்கீன் மச்லி' செயலியின் வெளியீடு: இந்தியாவின் அலங்கார மீன்வளர்ப்புத் தொழிலுக்கான ஒரு மைல்கல் ஆகும்.




- ✓ இந்திய அலங்கார மீன்வளர்ப்புத் தொழிலின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியில், ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர், ஸ்ரீராஜீவ்ரஞ்சன் சிங் என்னும் லலன் சிங், 'ரங்கீன் மச்சிலி' என்ற கைபேசி செயலியை வெளியிட்டார்.
- ✓ புவனேஸ்வரில் உள்ள புகழ்பெற்ற இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் - மத்திய நன்னீர் மீன்வளர்ப்பு நிறுவனத்தில் (ICAR-Central Institute of Freshwater Aquaculture) இந்த வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது. இது அலங்கார மீன்வளர்ப்பு ஆர்வலர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு அறிவு மற்றும் வளங்களைப் பரப்புவதில் ஒரு புதிய சகாப்தத்தைக் குறிக்கிறது..

## ➢ போர்ட் பிளேர், ஸ்ரீவிஜயபுரம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது

- ✓ அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் உள்ள போர்ட் பிளேரின் பெயரை ஸ்ரீவிஜயபுரம் என்று மாற்றும் முடிவை இந்திய உள்துறை அமைச்சர் திரு. அமீத்ஷா அறிவித்துள்ளார்.




✓ அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் நாட்டின் சுதந்திரப் போராட்டம் மற்றும் வரலாற்றில் 'இணையில்லாத இடத்தைப்' பெற்றுள்ளதால், காலனித்துவ முத்திரைகளில் இருந்து நாட்டை விடுவிப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

✓ ஸ்ரீவிஜயபுரம் என்ற பெயர் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் அடைந்த வெற்றி மற்றும் அதில் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் தனித்துவமான பங்களிப்பைக் குறிப்பதாக உள்ளது.

➢ **பாரத் புத்தொழில் அறிவு அணுகல் பதிவு (Bharat Startup Knowledge Access Registry - BHASKAR)**

✓ தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறையானது பாஸ்கரை (BHASKAR) அறிமுகப்படுத்தும்.




✓ பாரத் புத்தொழில் அறிவு அணுகல் பதிவேடு என்பது இந்தியாவின் புத்தொழில் சுற்றுச் சூழல் அமைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட டிஜிட்டல் தளமாகும்.

✓ இந்த பாஸ்கர் முயற்சியானது தொழினைவோர் சுற்றுச் சூழல் அமைப்பின் பங்குதாரர்களிடையே ஒருங்கிணைப்பை மையப்படுத்தவும், நெறிப்படுத்தவும் மற்றும் மேம்படுத்தவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

✓ இந்த பாஸ்கர், முதலீட்டாளர்கள், புத்தொழில் நிறுவனங்கள், வழிகாட்டிகள் மற்றும் இதர பங்குதாரர்களிடையே உள்ள இடைவெளியைக் குறைக்கும்.

➢ **இந்தியாவின் முதல் நமோ பாரத் விரைவு இரயில்**

✓ தற்போதைய காலகட்டம் இந்தியாவின் பொற்காலம் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.




- ✓ அகமதாபாத்தில் உள்ள ஜிஎம்டிசி மைதானத்தில் 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்த பிறகு பிரதமர் உரையாற்றினார்.
- ✓ அகமதாபாத் மற்றும் பூஜ் இடையே நாட்டின் முதல் நமோ பாரத் விரைவு இரயிலையும் மற்ற ஆறு வந்தே பாரத் இரயில்களையம் அவர் மெய்நிகராகக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- ✓ நமோ பாரத் விரைவு இரயிலை அறிமுகப்படுத்தியதன்மூலம். இந்திய இரயில்வேயானது மெட்ரோ பயணத்தில் ஒரு புரட்சியைப் பதிவு செய்துள்ளது.

## ➢ "ஒரே நாடு ஒரே தேர்தல்' மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது

- ✓ முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையிலான அறிக்கையின் அடிப்படையில், மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களுக்கு ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்துவதற்கான முன்மொழிவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.




- ✓ இந்த மசோதா வரும் நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ மக்களவை, மாநில சட்ட சபைகள் மற்றும் பின்னர் உள்ளாட்சி அமைப்பகளுக்கு ஒத்திசைவு செய்யப்பட்ட தேர்தல்களை நோக்கி நகரும் 18 அரசியலமைப்பு திருத்தங்களை இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.

## ➢ வெண்மைப் புரட்சி 2.0

- ✓ மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷாவால் 'வெண்மைப் புரட்சி 2.0' தொடங்கப்பட்டது.




- 2 இலட்சம் புதிய பன்னோக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பால் மற்றும் மீன்வளக் கூட்டுறவு சங்கங்களை உருவாக்கி வலுப்படுத்துவதற்கான செயல் திட்டத்துடன் இது தொடங்கப்பட்டுள்ளது.
- வெண்மைப் புரட்சி 2.0 ன்கீழ், அடுத்த ஐந்தாண்டுகளில் பால் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பால் கொள்முதலை 50 விழுக்காடு அதிகரிக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- பெண் விவசாயிகளுக்கு அதிகாரமளித்தல், உள்ளூர் பால் உற்பத்தியை மேம்படுத்துதல், பால் உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் பால் ஏற்றுமதியை அதிகரித்தல் ஆகிய நான்கு முக்கிய அம்சங்கள் மீது இந்தத் திட்டம் கவனம் செலுத்துகிறது.

- **வலியைத் தராத கருணைக் கொலை (Passive Euthanasia) பற்றிய புதிய வரைவு வழிகாட்டுதல்களை அரசு வெளியிட்டுள்ளது**

- வலியைத் தராத கருணைக் கொலை தொடர்பான வழிகாட்டுதல்களின் புதிய வரைவை மத்திய 'சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ளது.




- இந்தப் புதிய வழிகாட்டுதல்கள், குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில், தீவிர நோய்வாய்ப்பட்ட நோயாளிகளுக்கு வாழ்க்கை ஆதரவைத் திரும்பப் பெறுவது குறித்து மருத்துவர்கள் பரிசீலிக்க முடிவு செய்ய வேண்டும் என்று பரிந்துரைக்கிறது.
- மூளைத் தண்டுவட இறப்பு மற்றும் நோயாளி அல்லது அவர்களது உறவினர்களால் தெரிவிக்கப்பட்ட மறுப்பு போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு நோயாளிகளின் நலனுக்கான முடிவுகள் எடுக்கப்படுவதை உறுதி செய்வதை இந்த வழிகாட்டுதல்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன.
- இறுதிகட்ட நோய்நிலையில் இருக்கும் நோயாளிகளின் வாழ்க்கை ஆதரவைத் திரும்பப் பெறுவதற்கான வரைவு வழிகாட்டுதல்கள், நோயாளிக்குப் பயனளிக்க வாய்ப்பில்லாத ஒரு நோயாளியின் வாழ்க்கை-ஆதரவு நடவடிக்கையைத் தொடங்க வேண்டாம் என்ற முடிவை மருத்துவர்கள் கருத்தில் கொள்ளக் கூடாது என்றும் கூறுகிறது.

# திட்டங்கள்

➢ **ஜல் சஞ்சய் ஜன் பகிதாரி (Jal Sanchay Jan Bhagidari)**

✓ பிரதமர் நரேந்திர மோடி, குஜராத் மாநிலம் சூரத்தில் ‘ஜல் சஞ்சய் ஜன் பகிதாரி’ என்ற ஒரு புதிய முயற்சியைத் தொடங்கி வைக்க உள்ளார்.




✓ இந்த முன்முயற்சியானது இந்தியா முழுவதும் நீர் பாதுகாப்பு முயற்சிகளில் சமூக ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியை பிரதிபலிக்கிறது.

✓ நாட்டின் நீண்ட கால நீர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான கூட்டு நீர் மேலாண்மை குறித்த பிரதமரின் பார்வைக்கு வலுவூட்டும் வகையில், தற்போது நடைபெற்று வரும் ‘ஜல்சக்தி அபியான்: மழையைப் பிடிப்போம்’ பிரச்சாரத்துடன் இந்தத் தொடக்கம் இணைந்துள்ளது.

➢ **துரிதப்படுத்தப்பட்ட கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சி திட்டத்திற்கான கூட்டாண்மைகள் (Partnerships for Accelerated Innovation and Research (PAIR) Programme)**


✓ உயர் கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சியை அதிகரிப்பதற்காக இந்த, PAIR திட்டம் தொடங்கப்பட்டது..




✓ உயர் கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சித் திறன்களை உயர்த்துவதற்காக வடிவமைக்கப்பட்ட துரித கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சிக்கான கூட்டாண்மை திட்டத்தை ஒன்றிய அரசு தொடங்க உள்ளது. உயர் மட்ட ஆராய்ச்சி நிறுவனங்களை ஆராய்ச்சித் திறன் குறைவாக உள்ள நிறுவனங்களுடன் இணைப்பதன்மூலம், கூட்டு வழிகாட்டல் சூழ்நிலையை உருவாக்கி, இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட உள்ளது.

➢ **70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுள்ள அனைவருக்கும் சுகாதார காப்பீட்டிற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது**

✓ ஒன்றிய அமைச்சரவை ஆயுஷ்மான் பாரத் பிரதமரின் ஆரோக்கிய யோஜனா (Ayushman Bharat PM Jan Arogya Yojana) திட்டத்தின் பலன்களை 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுள்ள அனைத்து மூத்த குடிமக்களுக்கும் அவர்களின் வருமானத்தைப் பொருட்படுத்தாமல் விரிவுபடுத்தியுள்ளது.




✓ ஒன்றிய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அறிவித்த இந்தத் திட்டமானது ஆண்டுக்கு ரூ.5 இலட்சம் வரை இலவச சிகிச்சையை அளிக்கும். இதனால் சமார் 6 கோடி தனிநபர்கள் மற்றும் 4.5 கோடி குடும்பங்கள் பயனடையும்.

➢ **மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ‘டிஜிட்டல் அடையாளங்களை’ வழங்கும் புதிய திட்டம்**

✓ ஒரு முக்கியமான சிறப்பம்சமாக தேசிய மீன்வள மேம்பாட்டுத் திட்டம் (National Fisheries Development Program) போர்ட்டல் தொடங்கப்பட்டுள்ளது. இது அதன் மதிப்புச் சங்கிலி முழுவதும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு டிஜிட்டல் அடையாளங்களை வழங்கும்.



✓ இந்த முன்முயற்சியானது, பிரதமரின் ம்த்ஸ்ய சம்பதா யோஜனா (Pradhan Mantri Matsya Sampada Yojana) திட்டத்தின் துணைத் திட்டமாகிய பிரதமரின் மத்தஸ்ய கிசான் சம்ரிதி சா-யோஜனா (Pradhan Mantri Matsya Kisan Samridhi Sah-Yojana) திட்டத்தின்கீழ் உள்ளது. இது மீன்பிடி தொழிலாளர்கள் நிறுவன கடன், செயல்திறன் மானியங்கள் மற்றும் மீன்வளர்ப்பு காப்பீடு போன்ற பலன்களைப் பெற உதவுகிறது.

➢ **2,000 கோடி 'மிஷன் மௌசம்' (Mission Mausam) திட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல்**

✓ பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய அமைச்சரவை, செப்டம்பர் 11, 2024 அன்று, இரண்டு ஆண்டுகளில் 2,000 செலவில் 'மிஷன் மௌசம்' திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.




✓ புவி அறிவியல் அமைச்சகத்தின் தலைமையிலான இந்தத் திட்டம், வளிமண்டல அறிவியலில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவதையும், வானிலை முன்னறிவிப்பு மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இந்த முன்முயற்சியானது, வானிலை முன்னறிவிப்பில் புதிய தரநிலைகளை அமைப்பதற்காக, மேம்பட்ட கண்காணிப்பு அமைப்புகள், உயர் செயல்திறன் கொண்ட கணினி மற்றும் செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் போன்ற தொழில்நுட்பங்களை ஒருங்கிணைக்கும்.

➢ **மின்சார வாகன புரட்சிக்கான பிரதமரின் இ-டிரைவ் (PM E-DRIVE Scheme) திட்டம்**




✓ பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய அமைச்சரவை, இந்தியாவின் மின்சார இயக்கத்தை மேம்படுத்துவதற்காக புதுமையான வாகன மேம்பாட்டுத் திட்டத்தில் பிரதமரின் மின்-டிரைவ் புரட்சி திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- ரூ.10,900 கோடி செலவிலான இந்தத் திட்டம், இரண்டு ஆண்டுகளில், மின்சார வாகனத்திற்கு மாறுவதை மேம்படுத்துதல் மற்றும் போக்குவரத்து சுற்றுச் சூழல் பாதிப்பைக் குறைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## NPS-வாத்சல்யா திட்டம்

- 2024-25 ஆம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் செப்டம்பர் 18ஆம் தேதி புது தில்லியில் என்பிஎஸ் வாத்சல்யா திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.




- ஓய்வூதியக் கணக்கில் முதலீடு செய்வதன்மூலமும் கூட்டு சக்தியுடன் நீண்ட கால செல்வத்தை உறுதி செய்வதன்மூலமும், என்பிஎஸ் வாத்சல்யா திட்டமானது, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக சேமிக்க அனுமதிக்கும்.
- பெற்றோர்கள் தங்கள் குழந்தையின் பெயரில் ஆண்டுக்கு ரூ.1000 முதலீடு செய்வதன்மூலம், இந்தத் திட்டமானது நெகிழ்வான பங்களிப்புகள் மற்றும் முதலீட்டு விருப்பங்களை வழங்குகிறது.

## பயோ-ரைட் (Bio-RIDE) திட்டம்

- 15வது நிதி ஆணையத்தின் காலத்தில் (2021-22 முதல் 2025-26 வரை) 9,197 கோடி செலவில் உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் உயிர் தொழில்நுட்ப ஆராய்ச்சி கண்டுபிடிப்பு மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு (பயோ-ரைட்) திட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.



- ✓ இந்தத் திட்டமானது, ஏற்கனவே உள்ள 1) உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் 2) தொழில்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு ஆகிய இரண்டு திட்டங்களை ஒருங்கிணைக்கிறது.
- ✓ இந்த முன்முயற்சியானது, புதுமைகளை வளர்ப்பதையம், உயிரி-தொழில் முனைவோரை வலுப்படுத்துவதையும், உயிரி உற்பத்தி மற்றும் உயிரித் தொழில்நுட்பத்தில் இந்தியாவின் உலகளாவிய நிலையை உயர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ வனவிலங்கு வாழ்விட மேம்பாட்டுத் திட்டம் (Wildlife Habitats Development Scheme)

- ✓ 15வது நிதி ஆணைய சுழற்சிக்கான வனவிலங்கு வாழ்விடங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.



- ✓ இந்தத் திட்டமானது புலிகள் திட்டம், யானைகள் திட்டம் மற்றும் வனவிலங்கு வாழ்விடத்தை மேம்படுத்துதல் போன்ற முக்கிய முயற்சிகளை ஆதரிக்கிறது.
- ✓ வனவிலங்கு கண்காணிப்புக்கு செயற்கை நுண்ணறிவு, கேமரா பொறிகள் மற்றும் பாதுகாப்பு மரபியல் உள்ளிட்ட தொழில்நுட்ப தலையீடுகளை ஆதரிப்பதில் இந்த முயற்சி கவனம் செலுத்துகிறது.
- ✓ இந்தத் திட்டம், 55 புலிகள் காப்பகங்கள், 33 யானைகள் காப்பகங்கள் மற்றும் 718 பாதுகாக்கப்பட்ட பகுதிகள் ஆகியவற்றிற்கு பயனுள்ளதாக உள்ளது. இதன்மூலம் வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் காலநிலை மீள்தன்மை ஆகிய இரண்டுக்கும் இது பங்களிக்கிறது.

# நீதிமன்ற தீர்ப்புகள்

➢ **‘குழந்தை பாலியல் துஷ்பிரயோக’ படங்களைப் பார்ப்பது ஒரு குற்றம்: உச்ச நீதி மன்றம்**




✓ குழந்தைகள் சம்பந்தப்பட்ட ஆபாசப் படங்களை தனிப்பட்ட முறையில் பார்த்தல், பதிவிறக்கம் செய்தல், சேமித்தல், வைத்திருத்தல், விநியோகம் செய்தல் அல்லது காட்சிப்படுத்துதல் ஆகியவை பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் (போக்சோ) சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின்கீழ் குற்றமாகும் என்று உச்ச நீதிமன்றம் திங்கட்கிழமை அன்று கூறியுள்ளது.

# சர்வதேச நிகழ்வுகள்

➢ **தொழுநோயை ஒழித்த முதல் நாடாக ஜோர்டான் திகழ்கிறது**

✓ உலக சுகாதார அமைப்பு உலகிலேயே தொழுநோயை ஒழித்த முதல் நாடாக ஜோர்டானை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளது.




✓ இந்த அங்கீகாரத்தை உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் ஜெனரல் டாக்டர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் பாராட்டினார்.

✓ ஜோர்டானின் வெற்றி பொது சுகாதாரத்தில் ஒரு பெரிய மைல்கல் ஆகும்.

✓ நாடுகள், சரியான உத்திகள்மூலம், நோய்களை ஒழிப்பது மட்டுமல்லாமல், அந்த நோய்களின் எதிர்மறையான சமூக மற்றும் பொருளாதார விளைவுகளையும் குறைக்க முடியும் என்பதை இது காட்டுகிறது.

➢ **இலங்கையின் அதிபராக திசநாயக்க (Dissanayake) பதவியேற்றார்.**




✓ இலங்கையின் புதிய அதிபராகத் தேர்வு செய்யப்பட்ட அனுரகுமார திசநாயக்க, ஜனநாயகத்தை வலுப்படுத்துவதாகவும், 'மக்களின் நம்பிக்கையைப் பெற கடுமையாக உழைக்கப் போவதாகவும்' திங்களன்று உறுதியளித்தார்.

# மாநாடுகளும் உச்சி மாநாடுகளும்

- **கோவாவில் உலக ஆடியோ விஷுவல் மற்றும் பொழுதுபோக்கு உச்சி மாநாடு (World Audio Visual and Entertainment Summit - WAVES)) நடைபெற்றது**

✓ இந்தியாவின் ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறையை மேம்படுத்துவதற்கும் அதன் உலகளாவிய செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கும் இந்திய அரசு, ஆடியோ விஷுவல் மற்றும் பொழுது போக்கு உச்சி மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியை நடத்தும்




✓ இந்த ஆண்டு நவம்பர் 20 முதல் நவம்பர் 25 வரை கோவாவில் இந்த உச்சி மாநாடு நடைபெற உள்ளது.

✓ பொழுதுபோக்கு பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்பத்தில் கவனம் செலுத்தி, உலகளாவிய ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு சகோதரத்துவத்தின் சின்னங்களுக்கான ஒரு குறிப்பிடத்தக்க தளமாக விளங்க இந்த உலக ஆடியோ விஷுவல் மற்றும் பொழுதுபோக்கு உச்சி மாநாடு தயாராக உள்ளது.

- **இந்தியா – அமெரிக்க பாதுகாப்பு முடுக்க சுற்றுச் சூழல் மாநாடு (India-US Defence Acceleration Ecosystem (Indus-X) Summit)**

✓ இந்தியா – அமெரிக்க பாதுகாப்பு முடுக்க சுற்றச் சூழல் அமைப்பு உச்சி மாநாட்டின் மூன்றாவது பதிப்பு செப்டம்பர் தொடக்கத்தில் கலிபோர்னியாவில் உள்ள ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகத்தில் நடைபெறும்.




✓ இந்த மாநாட்டின்போது, எல்லை தாண்டிய பாதுகாப்ப கண்டுபிடிப்பு சுற்றுச் சூழல் அமைப்பை மேம்படுத்துவது குறித்து இரண்டு நாடுகளின் உயர்மட்டப் பாதுகாப்புத் தலைமையும் விவாதிக்க உள்ளன.

- ✓ இந்த 3வது இண்டஸ்-எக்ஸ் உச்சி மாநாட்டின் கருப்பொருள், 'எல்லை தாண்டிய பாதுகாப்பு கண்டுபிடிப்பு சுற்றுச் சூழல் அமைப்பை மேம்படுத்த முதலீட்டு வாய்ப்புகளைப் பயன்படுத்துதல்' என்பதாகும்.
- ✓ இந்த இண்டஸ்-எக்ஸ் ஜுன் 2023இல் தொடங்கப்பட்டது. இது மூலோபாய தொழில்நுட்பக் கூட்டாண்மை மற்றும் பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ இந்திய ஆயுதப் படைகளின் முதல் கூட்டுத் தளபதிகள் மாநாடு

- ✓ செப்டம்பர் 4-5, 2024 அன்று, இந்தியாவின் இராணுவ நிலப்பரப்பில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வு நடைபெற்றது.



First Joint Commander's Conference of Indian Armed Forces

- ✓ இந்திய இராணுவப் படைகளின் ஒருங்கிணைப்பில் ஒரு புதிய சகாப்தத்தைக் குறிக்கும் வகையில், உத்தரப் பிரதேசத்தின் லக்னோவில் ஆயுதப் படைகளின் முதல் கூட்டுத் தளபதி மாநாடு நடைபெற்றது.

- ✓ பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற இந்த இரண்டு நாள் மாநாட்டில், ஆயுதப் படைகள் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகள் குறித்து விவாதிக்கவும், இந்தியாவின் பாதுகாப்புத் திறன்களின் எதிர்காலம் குறித்து வியூகம் வகுக்கவும் ராணுவ உயர் அதிகாரிகள் ஒன்று சேர்ந்தனர்.

## ➢ இந்திய கடலோர காவல் படை 20வது HACGAM இல் கலந்து கொள்கிறது


Indian Coast Guard Participates in 20th HACGAM

- ✓ ஆசியாவின் கடல்சார் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக. தென் கொரியாவின் இன்சியான் நகரில் நடைபெற்ற ஆசிய கடலோர காவல்படை முகமைகளின் 20வது தலைவர்கள் கூட்டத்தில் (Heads of Asian Coast Guard Agencies Meeting - HACGAM)) இந்திய கடலோர காவல்படை பங்கேற்றது.

- ✓ செப்டம்பர் 2-6, 2024 வரை நடைபெற்ற இந்த முக்கியமான கூட்டம், முக்கியமான கடல்சார் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கவும், கூட்டு முயற்சிகளை வலுப்படுத்தவும் ஆசியா முழுவதிலும் உள்ள கடலோரக் காவல் முகமைகளை ஒன்றிணைத்தது.

- ➢ **இந்தியா – சவூதி அரேபிய பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான கூட்டுக் குழு (India-Saudi Arabia Joint Committee on Defense Cooperation)**

- ✓ 6வது கூட்டுக் குழுக் கூட்டத்தில் இந்தியாவும் சவூதி அரேபியாவும் பாதுகாப்பு உறவுகளை மேம்படுத்தின. இந்தியா – சவூதி அரேபியா இடையேயான பாதகாப்பு ஒத்துழைப்புக்கான கூட்டுக் குழுவின் 6வது கூட்டம் ரியாத்தில் செப்டம்பர் 4ஆம் தேதி நடைபெற்றது.



- ✓ கூட்டுப் பயிற்சிகள், நிபுணத்துவ பரிமாற்றங்கள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பு உள்ளிட்ட இராணுவ ஒத்துழைப்பின் பல்வேறு அம்சங்கள் இந்த விவாதத்தில் அடங்கும். ஒட்டுமொத்த பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த இரண்டு தரப்பும் ஒருமித்த கருத்தை எட்டின.

- ✓ கூட்டுப் பாதுகாப்பு ஒத்துழைப்புக் குழு என்பது பாதுகாப்பு ஒத்துழைப்பின் நோக்கங்களை மேம்படுத்துவதற்கான ஒரு பொறிமுறையாகும்.

- ➢ **சிவில் விமானப் போக்குவரத்து தொடர்பான 2வது ஆசிய பசிபிக் மந்திரிகள் மாநாடு**

- ✓ இந்தியாவின் விமானப் போக்குவரத்துத் துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது. இது உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் ஆற்றல்மிக்க சந்தைகளில் ஒன்றாக உருவாகியுள்ளது.




- 2024ஆம் ஆண்டு செப்டம்பர் 11-12 தேதிகளில் சிவில் விமானப் போக்குவரத்து தொடர்பான 2வது ஆசிய பசிபிக் மந்திரிகள் மாநாடு புதுதில்லியில் நடைபெறவுள்ள நிலையில், இந்தியா விமானப் போக்குவரத்துத் துறையில் தனது தலைமையை வலுப்படுத்த உள்ளது.

- ICAO மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் இணைந்து நடத்தும் இந்த உச்சி மாநாடு, வளர்ச்சி, உள்கட்டமைப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகளை ஆராய்வதில், குறிப்பாக பிராந்திய இணைப்பில் ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகளை ஆராய்வதில் கவனம் செலுத்துகிறது.

- **செமிகான் இந்தியா 2024**

- செப்டம்பர் 11, 2024 அன்று உத்தரப் பிரதேசத்தின் கிரேட்டர் நொய்டாவில் உள்ள இந்தியா எக்ஸ்போ மாட்டில் செமிகான் இந்தியா 2024ஐ பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.




- செப்டம்பர் 11 முதல் 13 வரை நடைபெறும் மூன்று நாள் மாநாடு, இந்தியாவை உலகளாவிய குறைக்கடத்தி மையமாக நிலைநிறுத்தும் நோக்கத்துடன் இந்தியாவின் குறைக்கடத்தி உத்தி மற்றும் கொள்கையை வெளிப்படுத்துகிறது.

- **பசுமை ஹைட்ரஜன் பற்றிய 2வது சர்வதேச மாநாடு**
- செப்டம்பர் 11-13 வரை புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெறும் பசுமை ஹைட்ரஜன் பற்றிய 2வது சர்வதேச மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி செப்டம்பர் 11, 2024 அன்று மெய்நிகராகத் தொடங்கி வைத்தார்.




- ✓ சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் பசுமை ஹைட்ரஜன் ஏற்பை விரைவுபடுத்துவதற்கான மூலோபாய முதலீடுகள் மற்றும் கூட்டாண்மைகளை வளர்ப்பதன்மூலம் உலகளாவிய பசுமை ஹைட்ரஜன் சுற்றுச் சூழல் அமைப்பில் இந்தியாவை முன்னணியில் வைப்பதை இந்த மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ 4வது உலகளாவிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீட்டாளர்கள் சந்திப்பு

- ✓ குஜராத்தின் காந்திநகரில் 4வது மறு முதலீட்டு (RE-INVEST) உச்சி மாநாட்டை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இது இந்தியாவின் 200 ஜிகாவாட் புதைபடிவமற்ற எரிபொருள் திறன் சாதனையைக் கொண்டாடுகிறது.




- ✓ பாரிஸ் காலநிலை இலக்குகளை சந்திக்கும் முதல் ஜி20 நாடு என்பதால், பசுமையான எதிர்காலத்திற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை மோடி வலியுறுத்தினார்.
- ✓ ஒவ்வொரு வீட்டையும் மின உற்பத்தியாளராக்குவதை நோக்கமாகக் கொண்ட பிரதமர் சூர்யா கர் மு.ஃ.ப்ட் பிஜிலி யோஜனாவுடன் (PM Surya Ghar Muft Bijli Yojana) புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் புதுமைகளை இந்த உச்சி மாநாடு எடுத்துக்காட்டுகிறது..

## ➢ அமெரிக்காவில் குவாட் தலைவர்கள் நான்காவது உச்சி மாநாடு

- ✓ பிரதமர் நரேந்திர மோடி செப்டம்பர் 21ஆம் தேதி முதல் 23ம் தேதி வரை அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அவர் செப்டம்பர் 21 அன்று டெலாவேரில் உள்ள வில்மிங்டனின் நான்காவது குவாட் தலைவர்கள் உச்சி மாநாட்டில் பங்கேற்றார்.




- ✓ இந்த ஆண்டு உச்சி மாநாட்டை நடத்துமாறு அமெரிக்கா விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து, அடுத்த குவாட் உச்சி மாநாட்டை 2025இல் இந்தியா நடத்த ஒப்புக் கொண்டது.

- ✓ செப்டம்பர் 23ஆம் தேதி நியூயார்க்கில் உள்ள ஐநா பொதுச் சபையில் 'எதிர்கால உச்சி மாநாட்டில்' பிரதமர் மோடி உரையாற்றினார்.

- ✓ இந்த உச்சி மாநாட்டின் கருப்பொருள், 'ஒரு சிறந்த நாளைக்கான பலதரப்பு தீர்வுகள்' என்பதாகும்..

➢ **சர்வதேச வாஷ் (International WASH) மாநாடு 2024**

- ✓ சர்வதேச வாஷ் மாநாடு 2024, 8வது இந்திய நீர் வாரத்தில் நிறைவு பெற்றது.




- ✓ 8வது இந்திய நீர் வாரத்தையொட்டி, ஜல் சக்தி அமைச்சகத்தின் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை மூலம் சர்வதேச வாஷ் (WASH -Water, Sanitation and Hygiene) மாநாடு 17-19 செப்டம்பர் 2024க்கு இடையில் புது தில்லியில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- ✓ இந்த மூன்றுநாள் மாநாடு 'கிராமப்புற நீர் விநியோகத்தை நிலைநிறுத்துதல்' என்ற கருப் பொருளை மையமாகக் கொண்டு நடத்தப்பட்டது.
- ✓ நிலையான வளர்ச்சி இலக்கு எண்.6-ஐ அடைவதில் சிறப்பு கவனம் செலுத்தி, உலகளாவிய வாஷ் சவால்களை எதிர்கொள்வதை நோக்கமாகக் கொண்ட அறிவுப் பரிமாற்றம், புதுமைகளைக் காட்சிப் படுத்துதல் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதற்கான தளத்தை இது வழங்கியது.

- **உலக உணவு இந்தியா 2024 (World Food India 2024)**

- ✓ உலக உணவு இந்தியா 2024 செப்டம்பர் 19, 2024 அன்று புதுதில்லியில் தொடங்கியது. இந்த நான்கு நாள் மெகா திருவிழா, 22 செப்டம்பர் 2024 வரை நடைபெறும்.




5

- ✓ 90க்கும் மேற்பட்ட நாடுகள், 26 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மற்றும் 18 மத்திய அமைச்சகங்கள் இந்த நிகழ்வில் பங்கேற்கின்றன.
- ✓ ஜப்பான் ஒரு கூட்டாளி நாடாக விளங்குகிறது. வியட்நாமும் ஈரானும் கவனம் செலுத்தும் நாடுகளாகப் பங்கேற்கின்றன.
- ✓ உலக உணவு இந்தியா 2024 என்பது இந்தியாவின் மிகப்பெரிய உணவு உச்சி மாநாட்டின் 3வது பதிப்பாகும்.
- ✓ உணவு பதப்படுத்தும் தொழில் அமைச்சகம் 2017 இல் உலக உணவு இந்தியாவின் முதல் பதிப்பை அறிமுகப்படுத்தியது.

APOLLO STUDY CENTRE

# பாதுகாப்பு

- **இந்தியாவின் 2வது அணுசக்தி ஏவுகணை நீர்மூழ்கிக் கப்பல் 'ஐஎன்எஸ் அரிகாட் (INS Arighat))**
- ✓ அணுசக்தியில் இயங்கும் இந்தியாவின் இரண்டாவது பாலிஸ்டிக் ஏவுகணை நீர்மூழ்கிக் கப்பலான ஐஎன்எஸ் அரிகாத், பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் முன்னிலையில் விசாகப்பட்டினத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.




- ✓ இது 2016ஆம் ஆண்டில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ஐஎன்எஸ் அரிஹந்த் என்ற முதல் நீர்மூழ்கிக் கப்பலுடன் இணைகிறது.
- ✓ ஐஎன்எஸ் அரிஹந்த் 2016ஆகஸ்டில் அமைதியாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இது 6000 டன்கள் இடப்பெயர்ச்சி திறன் கொண்டது மற்றும் செறிவூட்டப்பட்ட யுரேனியத்துடன் கூடிய 83 மெகாவாட் அழுத்தப்பட்ட ஒளி நீர் உலை மூலம் இயக்கப்படுகிறது. ஐஎன்எஸ் அரிகாட் அதே அணுஉலை மற்றும் பரிமாணங்களைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. ஆனால் பல தொழில் நுட்ப மேம்படுத்தல்களைக் கொண்டுள்ளது.

- **வருணா பயிற்சி**
- ✓ இந்திய கடற்படையின் பி-8ஐ விமானம் பிரான்ஸ் நாட்டு கடற்படையுடன் இணைந்து வருணா பயிற்சியின் 22வது பதிப்பில் பங்கேற்க உள்ளது.



- ✓ இது ஐரோப்பாவில் பயன்படுத்தப்படுவது இதுவே முதல் முறை ஆகும்.
- ✓ இந்தியா – பிரான்ஸ் இருதரப்பு கடற்படைப் பயிற்சியாகிய வருணா, செப்டம்பர் 2-4 வரை மத்திய தரைக் கடலில் நடத்தப்படுகிறது.

- ✓ மேம்பட்டட தந்திரோபாய பயிற்சிகள் இந்தப் பயிற்சியின் ஒருபகுதியாக இருக்கும். இது பிரான்ஸ் மற்றும் இந்தியாவின் கடற்படைகளுக்கு இடையே வளர்ந்துவரும் ஒத்துழைப்பு மற்றும் இயங்கு தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

## ➢ யூத் அபியாஸ் (Yudh Abhyas) 2024

- ✓ இந்தியா மற்றும் அமெரிக்க கூட்டு ராணுவப் பயிற்சியாகிய யூத் அபியாஸ் 2024, ராஜஸ்தானில் தொடங்கியது.




- ✓ இந்தியா – அமெரிக்க கூட்டு இராணுவப் பயிற்சியின் 20வது பதிப்பாகிய, யூத் அபியாஸ் 2024, ராஜஸ்தானின் மஹாஜன் ஃபீல்டு ஃபயரிங் ரேஞ்சில் உள்ள அயல்நாட்டுப் பயிற்சி முனையில் தொடங்கியது.
- ✓ இந்தப் பயிற்சி செப்டம்பர் 9 முதல் 22 வரை நடைபெறும். 2004 முதல் இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே ஆண்டுதோறும் இந்த பயிற்சி யூத் அபியாஸ் நடைபெற்று வருகிறது.
- ✓ ராஜ்புத் படைப் பிரிவைச் சேர்ந்த ஒரு பட்டாலியன் உட்பட 600 வீரர்கள் அடங்கிய இந்திய இராணுவக் குழு இந்தப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது.

## ➢ இந்தியா – ஓமன் கூட்டு இராணுவப் பயிற்சி அல் நஜா 5 (Al Najah V)

- ✓ செப்டம்பர் 13 முதல் 26, 2024 வரை ஓமனின் சலாலாவில் உள்ள ரப்கூட் பயிற்சிப் பகுதியில் நடைபெறும் இந்தியா- ஓமன் கூட்டு இராணுவப் பயிற்சியான அல் நஜாவின் ஐந்தாவது பதிப்பிற்காக இந்திய இராணுவக் குழு புறப்பட்டது.



- ✓ இந்த அல் நஜா பயிற்சியானது 2015ஆம் ஆண்டு முதல் இந்தியாவிற்கும் ஓமனுக்கும் இடையில் மாறி மாறி இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது.

✓ இந்த ஆண்டு, இந்தியா மற்றும் ஓமன் ஆகிய இரண்டு நாடுகளும் தலா 60 பணியாளர்களை அனுப்புகின்றன. இந்திய அணி இந்திரமயமாக்கப்பட்ட காலாட்படை படைப்பிரிவையும், ஓமன் நாடு ராயல் ஆர்மி எல்லைப் படையையும் இதற்காக அனுப்புகின்றன.

➢ **ககாடு பயிற்சி (Kakadu)**

✓ கமாண்டிங் அதிகாரி கேப்டன் அஜய் கன்வார் தலைமையிலான இந்திய கடற்படையின் பி81 விமானமானது, ககாடு 2024 பயிற்சியின் 16வது பதிப்பில் பங்கேற்பதற்காக ஆஸ்திரேலியாவின் டார்வின் சென்றடைந்தது.




✓ 'நம்பகமான மற்றும் நிரூபிக்கப்பட்ட கூட்டாண்மை மூலம் பிராந்திய ஒத்துழைப்பு' என்ற கருப்பொருளுடன் இந்திய கடற்படையானது 30க்கும் மேற்பட்ட நாடுகளுடன் இணைந்து இந்தப் பயிற்சியில் கலந்து கொள்ளும்.

✓ ககாடு என்பது ரான் (RAN) ஆல் நடத்தப்படும் ஒரு முக்கிய பயிற்சியாகும். ஏனெனில் இது பங்கேற்பு ஆயுதப் படைகளுக்கு இடையிலான உறவுகள் மற்றும் இயங்கு தன்மையை ஆழமாக்குகிறது.

➢ **கிழக்கு பாலம் 7 பயிற்சி (Exercise Eastern Bridge VII)**

✓ இந்திய விமானப் படைக்கும் ராயல் ஓமன் விமானப் படைக்கும் இடையிலான இருதரப்பு ராணுவப் பயிற்சியின் ஏழாவது பதிப்பு, ஓமனின் விமானப்படைத் தளமான மசிராவில் தொடங்கியது.




✓ இந்திய விமானப்படையானது மிக்-29, ஜாகுவார் போர் விமானங்கள் மற்றும் சி-17 குளோப்மாஸ்டர் 3 போக்குவரத்து விமானங்களை அனுப்பியுள்ளது.

## ➢ **ஐக்கியா பயிற்சி (AIKYA)**

✓ தேசிய பேரிடர்மேலாண்மை ஆணையம் மற்றும் ராணுவத்தின் தெற்குப் படையின் இரண்டு நாள் தேசிய கருத்தரங்கம், ஐக்கியா பயிற்சி என்ற தலைப்பில் சென்னையில் தொடங்குகிறது.





✓ இந்தப் பயிற்சியின் முதன்மை நோக்கம் பேரிடர் தயார்நிலையை மேம்படுத்துவது மற்றும் முக்கிய பங்குதாரர்களிடையே வலுவான ஒத்துழைப்பை வளர்ப்பதாகும்.

✓ இப்பயிற்சியில் உருவகப்படுத்துதல்கள், தொழில்நுட்ப விவாதங்கள் மற்றும் பேரிடர் மேலாண்மையின் பல்வேறு பணிகள் பற்றிய நிபுணர் நுண்ணறிவு ஆகியவை இடம் பெறும்.

# பொருளாதாரம்

➢ **உண்மையான ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (Real Gross State Domestic Product)**

✓ தெலுங்கானா. தமிழ்நாடு மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் உண்மையான ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிக வளர்ச்சியைப் பதிவு செய்தள்ளன.




✓ 2024ஆம் நிதியாண்டில், தெலுங்கானா, தமிழ்நாடு மற்றும் ராஜஸ்தான் ஆகியவை உண்மையான ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியின் அடிப்படையில் 10 பெரிய மாநிலங்களில் முன்னணி மாநிலங்களாக உள்ளன.

✓ தெலுங்கானாவின் பொருளாதாரம் 9.2 விழுக்காடு வளர்ச்சியைப் பதிவு செய்து 2024 நிதியாண்டில் உண்மையான ஒட்டு மொத்த மாநில உற்பத்தியில் 7.9 இலட்சம் கோடியை எட்டியுள்ளது.

✓ இது தேசிய ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியான 8.2 விழுக்காட்டைவிட அதிகமாக உள்ளது.

✓ தமிழ்நாட்டின் பொருளாதாரம் 8.2 விழுக்காடு வளர்ச்சியடைந்து 15.7 இலட்சம் கோடியை எட்டியுள்ளது. அதே சமயம் ராஜஸ்தானின பொருளாதாரம் 8 விழுக்காடு வளர்ச்சியடைந்துள்ளது

✓ அனைத்து பெரிய மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு சேவைத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது..

➢ **2030-31ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் பொருளாதாரம் மூன்றாவது பெரியதாக இருக்கும்**

✓ 2030-31க்குள் இந்தியப் பொருளாதாரம் மூன்றாவது பெரியதாக இருக்கும்: எஸ் அண்ட் ப்பி குளோபல். எஸ் அண்ட் ப்பி குளோபல் இந்தியாவின் கூற்றுப்படி, 2030-31க்குள் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா மாறும்.




- ✓ ஆண்டுக்கு 6.7 விழுக்காடு வளர்ச்சியை இந்தியா அடையும் என கணிக்கப்பட்டுள்ளது.
- ✓ 2024 நிதியாண்டில், 8.2 விழுக்காடு என்ற விகிதத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியுடன் வேகமாக வளரும் பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- ✓ இந்தியாவின் நடுத்தர கால வாய்ப்புகள் ஆரோக்கியமாகவும், பல துறைகளில் வாய்ப்புகள் நிறைந்ததாகவும் உள்ளன.

# நியமனங்கள்

➢ **சர்வதேச டேபிள் டென்னிஸ் அறக்கட்டளையின் (ITTF Foundation) முதல் இந்திய தூதர்**

✓ சர்வதேச டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பு அறக்கட்டளையின் முதல் இந்திய தூதராக துடுப்பெடுத்து ஆடும் ஷரத் கமல் நியமிக்கப்பட்டுள்ளார்.




✓ ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் அல்டிமேட் டேபிள் டென்னிஸ் சீசன் ஐந்தின் 11வது நாளில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

✓ அவர் குறிப்பாக பின்தங்கிய பின்னணியில் உள்ள குழந்தைகள் மத்தியில், மேம்பாட்டிற்காக டேபிள் டென்னிசை ஊக்குவிப்பார்..

➢ **புதிய நிதித்துறைச் செயலாளர்**

✓ ஒடிசா கேடரைச் சேர்ந்த 1987-ம் ஆண்டு பேட்ச் ஐஏஎஸ் அதிகாரியான துஹின் காந்தா பாண்டேவை, செப்டம்பர் 7, 2024 அன்று புதிய நிதிச் செயலாளராக இந்திய அரசு நிமியமித்தது.




✓ டி.வி. சோமநாதன் கேபினட் செயலாளர் பதவிக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிதித்துறை காலியிடத்தில் இந்த நியமனம் செய்யப்பட்டது.

✓ இதற்கு முன்னதாக, பாண்டே, முதலீடு மற்றும் பொதுச் சொத்து மேலாண்மைத் துறையின் செயலாளராகப் பணியாற்றினார். அங்கு பொதுச் சொத்து மேலாண்மை மற்றும் முதலீட்டுத் திட்டங்களை மேற்பார்வையிடுவதில் முக்கியப் பங்கு வகித்தார்.

➢ **தமிழகத்தின் துணை முதலமைச்சராக உதய நிதி ஸ்டாலின் பதவியேற்றார்.**

✓ தமிழகத்தின் துணை முதல்வராக உதயநிதி ஸ்டாலின் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், நான்கு தி.முக. சட்ட மன்ற உறுப்பினர்கள் கேபினட் அமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர்.




✓ இந்தப் பதவியேற்பு விழா ஆளுநர் மாளிகையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் நடைபெற்றது.

✓ அவர் முன்னதாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராகப் பதவி வகித்து வந்தார். அவரது புதிய பதவியின்கீழ், அவர் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுத் துறையையும் கவனிப்பார்.

APOLLO STUDY CENTRE

# விருதுகள்

➢ **சிங்கப்பூர் இலக்கியப் பரிசு**

✓ இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விரிவுரையாளர் பிரசாந்தி ராம் சிங்கப்பூர் இலக்கியப் பரிசை வென்றார்.




✓ நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விரிவுரையாளர் பிரசாந்தி ராம், 'ஒன்பது கஜ புடவைகள்' (Nine Yard Sarees) எனற புத்தகத்திற்காக சிங்கப்பூர் இலக்கியப் பரிசை வென்றுள்ளார்.

✓ இவரது சிறுகதை நூலாகிய – 'ஒன்பது கஜ புடவைகள்' 2023 இல் வெளியிடப்பட்டது.

✓ இந்தச் சிறுகதை நூல் சிங்கப்பூர், சிட்னி, நியூயார்க் மற்றும் கனெக்டிகட் ஆகிய நாடுகளில் வசிக்கும் தமிழ் பிராமணக் குடும்பத்தின் தலைமுறைகளைப் பற்றியது ஆகும்.

➢ **2024 சாஸ்த்ரா ராமானுஜன் பரிசு: கணித மேன்மையைக் கௌரவித்தல்**

✓ 2024 சாஸ்த்ரா ராமானுஜன் பரிசு அமைப்பு அதன் பெறுநரைக் கண்டறிந்ததால், கணித உலகம் மற்றொரு புத்திசாலித்தனமான மனதைக் கொண்டாட உள்ளது.




✓ இந்த மதிப்புமிக்க விருது, கணிதத்தில் சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கிறது. குறிப்பாக பழம்பெரும் மேதை ஸ்ரீனிவாச ராமானுஜனால் தாக்கம் பெற்றவர்களைக் கௌரவிப்பதற்காக வழங்கப்படுகிறது. இந்த விருது அமெரிக்காவின் ஜார்ஜியா இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியின் அலெக்சாண்டர் டன்னுக்கு (Alexander Dunn) வழங்கப்படுகிறது.

# புகழ்பெற்ற ஆளுமைகள்

- **துருவி படேல் 2024ஆம் ஆண்டுக்கான மிஸ் இந்தியா பட்டத்தை வென்றார்.**




- ✓ அமெரிக்காவைச் சேர்ந்த கணினி தகவல் அமைப்பு மாணவி துருவி படேல், இந்தியாவிற்கு வெளியே மிக நீண்ட காலமாக நடைபெறும் இந்தப் போட்டியான மிஸ் இந்தியா வேர்ல்ட்வைட் 2024 (Miss India Worldwide 2024) வெற்றியாளராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- **மிஸ் யுனிவர்ஸ் இந்தியா 2024**
- ✓ ஜெய்ப்பூரில் நடைபெற்ற மிஸ் யுனிவர்ஸ் இந்தியா 2024 போட்டியில் குஜராத்தைச் சேர்ந்த 19 வயது மாடல் அழகி ரியா சிங்கா தேர்வு செய்யப்பட்டார்.




- ✓ மெக்சிகோவில் நடைபெறும் உலகளாவிய மிஸ் யுனிவர்ஸ் போட்டியில் இந்தியாவின் சார்பில் அவர் கலந்து கொள்வார்.
- ✓ 19 வயதான ரியா சிங்கா குஜராத்தைச் சேர்ந்தவர் ஆவார்.


# புத்தகங்களும் ஆசிரியர்களும்

- **'தமிழகத்தில் ஸ்ரீராமன் - பிரிக்க முடியாத பந்தம்' (Sri Rama in Tamilagam – An inseparable bond) என்ற புத்தகம்.**




- ✓ தமிழ் இலக்கியம் மற்றும் பண்பாட்டு பாரம்பரியத்திற்கு இணக்கமான ஒரு குறிப்பிடத்தக்க நாளில், மேதகு தமிழக ஆளுநர் திரு.ஆர்.என். ரவி அவர்கள் தலைமையில், 'தமிழகத்தின் ஸ்ரீ ராமன் - பிரிக்க முடியாத பந்தம்' என்ற தலைப்பிலான திருப்புமுனை நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.
- ✓ இந்த இலக்கியப் படைப்பில், மதிப்பிற்குரிய இரட்டையர்களான டாக்டர். டி.கே ஹரி மற்றும் டாக்டர். டி.கே. ஹேமா ஹரி ஆகியோர் பகவான் ராமருக்கும், தற்போது தமிழ்நாடு என்று அழக்கப்படும் நிலப்பரப்புக்கும் இடையே உள்ள ஆழமான தொடர்பை ஆராய்கின்றனர்.

- **லாரா: இங்கிலாந்து வரலாறு: ஒரு கிரிக்கெட் ஜாம்பவானின் பயணம் (LARA: The England Chronicles – A Cricket Legend's Journey)**
- ✓ பிரையன் லாரா கிரிக்கெட் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க தனி நபராக விளங்குகிறார். அவரது தனித்துவம் வெறும் கருத்து மட்டுமல்ல. விளையாட்டின் சாதனைப் புத்தகங்களில் பொறிக்கப்பட்ட உண்மையும் ஆகும்.




- ✓ கிரிக்கெட் உலகம் அவரைப் போன்ற ஒரு பேட்ஸ்மேனை இதற்கு முன்பு பார்த்ததில்லை. மேலும் அவரைப் போன்ற ஒருவரை நாம் பார்க்க மாட்டோம் என்பது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது.

# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல்

- **கழுகுகளின் எண்ணிக்கை 2024**

✓ இயற்கையின் ‘துப்புரவுப் பணியாளர்களாகிய’ கழுகுகளைக் கண்காணிப்பதற்காக, ‘கழுகுகளின் எண்ணிக்கை’ (Vulture Count) 2024 என்ற ஒரு முயற்சியை WWF-India தொடங்கி வைத்துள்ளது.




✓ WWF-India என்ற அமைப்பு இந்த முயற்சியைத் தொடங்கியுள்ளது. இது கழுகுகளின் எண்ணிக்கையை கண்டறிவது மற்றும் அழிவின் விளிம்பில் உள்ள பறவை இனங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளது.

✓ இந்தப் பிரச்சாரம் செப்டம்பர் 7 ல் தொடங்கி அக்டோபர் 6 வரை நடைபெறும்.

✓ சர்வதேச கழுகு விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு இந்த முயற்சி தொடங்கப்பட்டுள்ளது.

✓ கழுகுகளின் எண்ணிக்கையை முறையாகக் கண்காணிப்பதன்மூலம் இந்த நெருக்கடியை சரிசெய்வதே 2024ஆம் ஆண்டு கழுகுக் கணக்கெடுப்பின் நோக்கமாகும்.

- **புதிய குதிக்கும் சிலந்தி இனங்கள் (Jumping Spider) தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டன.**

✓ தமிழகத்தின் பழனி மலைப் பகுதியின்கீழ், புதிய வகை ஜம்பிங் ஸ்பைடர், கார்ரோட்டஸ் பைபரஸ் (Carrhotus piperus) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



- ✓ இந்தக் கண்டுபிடிப்பானது இந்தப் பகுதியின் வளமான பல்லுயிர் பெருக்கத்தை எடுத்துக்காட்டுகிறது. இதன்மூலம் உலக அளவில் மொத்தமான 37 இனங்கள் அறியப்பட்ட நிலையில் இந்தியாவில் கார்ஸோட்டஸ் இனங்களின் எண்ணிக்கையை 10 ஆகக் குறிப்பிடுகிறது.

- ✓ திண்டுக்கல் தடியன்குடிசையில் கடந்த 2016ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்போது இந்த சிலந்தி வகை கண்டுபிடிக்கப்பட்டது.

- ✓ சவீதா மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனத்தைச் சேர்ந்த ஜான் காலேப் டி.டி மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வேளாண் பூச்சி வளங்களின் பணியகத்தைச் (ICAR-National Bureau of Agricultural Insect Resources) சேர்ந்த எம். சம்பத்குமார் ஆகியோர் இந்த ஆராய்ச்சிக்குத் தலைமை வகித்தனர்.

- ✓ இந்த விஞ்ஞானிகள் சிலந்தி குறித்து அறிவியல் விளக்கத்தை அளித்தனர்.

## ➢ அக்னி-4 பாலிஸ்டிக் ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக ஏவியது

- ✓ **ஒடிசாவின் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனைத் தளத்தில் இருந்து அக்னி-4 ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக ஏவியது.**




- ✓ வியூகப் படைக் கட்டளையின் (Strategic Forces Command) கீழ் இந்தச் சோதனை நடத்தப்பட்டது.
- ✓ அக்னி-4 என்பது 4000 கிமீ தூரம் வரை சென்று தாக்கக் கூடிய ஒரு நீண்டதூர, கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் ஏவுகணையாகும்.
- ✓ இது அணுஆயுதங்களைச் சுமந்து செல்லும் திறன் கொண்டது ஆகும்.

## ➢ தெற்கு பறவையினம் (Southern Birdwing)

- ✓ இந்தியாவின் இரண்டாவது பெரிய பட்டாம்பூச்சி இனமான சதர்ன் பேர்ட்விங், மதுரை மாவட்டத்தில் உள்ள புதிய நத்தம் நெடுஞ்சாலையில் சத்திரப்பட்டி மற்றும் கடவூர் இடையே கண்டுபிடிக்கப்பட்டது.



- ✓ 1932 முதல் 2020 வரை இந்தியாவின் மிகப்பெரிய பட்டாம்பூச்சி இனமாக சதர்ன் பர்ட்விங் இருந்தது. இது முக்கியமாக மேற்கு மற்றும் கிழக்கு மலைத் தொடரில் காணப்படுகிறது.
- ✓ இது 190 மிமீ இறக்கைகளைக் கொண்டது. பிரிட்டிஷ் பிரிகேடியர் வில்லியம் ஹாரி எவன்ஸ் 194 மிமீ இறக்கைகள் கொண்ட கோல்டன் போட்விங் என்ற பட்டாம்பூச்சி இனத்தைப் பதிவு செய்த பிறகு இது இரண்டாவது இடத்திற்குச் சென்றது.

## ➢ வீனஸ் ஆர்பிட்டர் மிஷன் (Venus Orbiter Mission)

- ✓ சந்திரன் மற்றும் செவ்வாய் கிரகத்திற்குப் பிறகு வீனஸ் கிரகத்திற்குப் பயணம் மேற்கொள்வதற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



- ✓ செப்டம்பர் 18 அன்று, வீனஸ் ஆர்பிட்டர் மிஷன் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது. இது இந்தியாவின் விண்வெளி ஆய்வு முயற்சிகளில் ஒரு முக்கிய மைல்கல்லாக இருக்கும்.
- ✓ பூமிக்கு மிக அருகில் உள்ள கிரகமான வீனஸை ஆராய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். மேலும் இது கிரக ஆய்வுக்கான அரசாங்கத்தின் பார்வையில் ச்நதிரன் மற்றும் செவ்வாய்க்கு அப்பால் ஒரு முக்கியமான படியாகும்.
- ✓ வீனஸ் பூமிக்கு மிக அருகில் உள்ள கிரகம் ஆகும். இது பூமியைப் போன்ற சூழ்நிலையில் உருவானதாகக் கருதப்படுகிறது.

## ➢ Ax-4 மிஷனுக்காக சர்வதேச விண்வெளி நிலையத்தில் செட் செய்யப்பட்ட இந்தியாவின் முதல் விண்வெளி வீரர்

- ✓ 2025ஆம் ஆண்டில், குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லா ஆக்சியம் - 4 (Ax-4) திட்டத்தை விண்வெளியில் இயக்குவதன் வாயிலாக இந்தியா மீண்டும் வரலாறு படைக்கும்.



- ✓ இந்தப் பணியானது சர்வதேச விண்வெளி நிலையத்தில் இந்தியாவின் முதல் மனித இருப்பாகும். 1984இல் விங் கமாண்டர் ராகேஷ் ஷர்மாவின் பணிக்குப் பிறகு, இந்தியாவில் இருந்து அரசால் அனுப்பப்படும் இரண்டாவது மனித விண்வெளிப் பயணம் இதுவாகும்.
- ✓ இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான ஒரு பெரிய திட்டத்தின் ஒரு பகுதியாக ஏஎக்ஸ்-4 மிஷன் உள்ளது.
- ✓ விண்வெளி வீரர் 'சுபான்ஷு சுக்லா, இந்திய விமானப்படையில் சோதனை பைலட் ஆவார்.

## ➢ பூமியின் புதிய மினி நிலவு: சிறுகோள் 2024 பிடி5 (PT5) இரண்டு மாதங்களுக்கு சுற்றுவட்டப் பாதையில் இருக்கும்

- ✓ 2024 பிடி5 என்ற ஒரு சிறிய கோள் வடிவில் ஒரு தற்காலிக 'மினி நிலவை' வரவேற்க பூமி தயாராக உள்ளது. இது செப்டம்பர் 29 முதல் நவம்பர் 25, 2024 வரை நமது கிரகத்தைச் சுற்றி வரும்.




- ✓ இது ஆகஸ்ட் 7, 2024 அன்று நாசாவின் ஆஸ்டிராய்டு டெரெஸ்ட்ரியல் - இம்பாக்ட் லாஸ்ட் அலர்ட் சிஸ்டம் (Asteroid Terrestrial-Impact Last Alert System - Atlas) மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த சிறுகோள் சுமார் 33 அடி அகலம் கொண்டது. இது பல்வேறு விண்வெளி பாறைகள் நிறைந்த அர்ஜுனா சிறுகோள் பெல்ட்டில் இருந்து உருவானது.
- ✓ இதனை வெறும் கண்களாலோ அல்லது வழக்கமான தொலைநோக்கிகளாலோ பார்க்க முடியாது என்றபோதிலும், தொழில்முறை வானியலாளர்கள் இரவு வானத்தில் வேகமாக நகரும் இந்தச் சிறிய பொருளின் படங்களைப் பிடிக்க முடியும்.

## ➢ வணிவெளி தலைமைப் பணியில் பெண்கள்

- ✓ பாலின சமத்துவத்தை அதிகரிப்பதற்காக விண்வெளியில் பெண்கள் என்ற தலைமைத்துவ திட்டம் இந்தியாவால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.




- ✓ இங்கிலாந்து - இந்தியா கல்வி மற்றும் ஆராய்ச்சி முயற்சியின் ஒரு பகுதியாக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- ✓ இது செப்டம்பர் 24, 2024 அன்று பிரிட்டிஷ் கவுன்சிலுடன் இணைந்து அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் தொடங்கப்பட்டது.
- ✓ மூலோபாய தலைமைத்துவ கட்டமைப்பை உருவாக்குவதன்மூலம் விண்வெளி அறிவியலில் பெண்களின் தலைமைத்துவத்தை அதிகரிப்பதற்காக நிறுவனங்களுக்குள் பாலினத்தை உள்ளடக்கிய நடைமுறைகளை வலுப்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

- ➢ **இந்தியா மூன்றாவது பெரிய எத்தனால் உற்பத்தியாளராகவும் நுகர்வோராகவும் ஆகியுள்ளது**
- ✓ இந்தியா சமீபத்தில் உலகின் மூன்றாவது பெரிய எத்தனால் உற்பத்தியாளராகவும் நுகர்வோராகவும் ஆகியுள்ளது



- ✓ உயிரி எரிபொருளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும், ஆற்றல் நிலைத்தன்மையை மேம்படுத்தவும் இந்திய அரசு செய்த முக்கியமான கொள்கை மாற்றங்களால் இது சாத்தியமானது.
- ✓ கரும்பு விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு நிதியுதவி உட்பட எத்தனால் உற்பத்தியை அதிகரிக்க அரசு பல திட்டங்களைத் தொடங்கியுள்ளது.
- ✓ இந்தக் கொள்கையானது எரிபொருளுடன் கலப்பதற்கு அதிக எத்தனால் கிடைக்கச் செய்தல், புதைபடிவ எரிபொருட்கள் தேவையைக் குறைத்தல் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகளுக்கு ஆதரவளித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது.

# விளையாட்டு

➢ **வித்யா ராம்ராஜ்**




✓ பெங்களூருவில் உள்ள ஸ்ரீகண்டீரவா விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற 63வது தேசிய திறந்தநிலை தடகள சாம்பியன்ஷிப் போட்டியில், பெண்களுக்கான 400 மீட்டர் தடை ஓட்டத்தில் தமிழகத்தைச் சேர்ந்த வித்யா ராம்ராஜ் 39 ஆண்டு கால சாதனையை முறியடித்து வரலாற்று சாதனை படைத்தார்.

✓ அவர் பந்தய தூரத்தை 56.23 வினாடிகளில் கடந்து முந்தைய சாதனையை முறியடித்தார். இந்திய புகழ்பெற்ற தடகள வீராங்கனையான பிடி உஷா 1985இல் 56.80 விநாடிகளில் முந்தைய சாதனையை நிகழ்த்தியிருந்தார்.

**பாராலிம்பிக்ஸ் 2024**

➢ **சரத்குமார், மாரியப்பன் தங்கவேலு ஆகியோர் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.**




✓ ஆண்களுக்கான உயரம் தாண்டுதல் டி63 போட்டியில் சரத்குமார் மற்றும் மாரியப்பன் தங்கவேலு ஆகியோர் திறமை மற்றும் உறுதியுடன் போராடி முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

✓ சரத்குமார் 1.88 மீட்டர் உயரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார்.

✓ மாரியப்பன் தங்கவேலு 1.85 மீட்டர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கம் வென்றார்.

➢ **துளசிமதி முருகேசன் வெள்ளிப் பதக்கம் வென்றார்**



- ✓ வெறும் 22 வயதில், துளசிமதி முருகேசன் பேட்மிண்டன் பெண்கள் ஒற்றையர் எஸ்யு 5 பிரிவில் முதலிடம் பிடித்தார். அவரது முயற்சிகள் பாராட்டத்தக்கதாக இருந்தபோதிலும், சவாலான இறுதிப் போட்டிக்குப் பிறகு அவர் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.
- ✓ டோக்கியோ 2020 பாராலிம்பிக்ஸில் தங்கப் பதக்கம் வென்ற சீன மக்கள் குடியரசின் யாங் கியு சியாவை துளசிமதி எதிர்கொண்டார்.
- ✓ 19 வயது மற்றும் இரண்டாம் நிலை வீராங்கனையான மனிஷா ராமதாஸ், அதே பிரிவில் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

➢ **பாரிஸ் 2024 பாராலிம்பிக்கில் சுமித் ஆண்டில் வரலாற்று தங்கம் வென்றார்.**




- ✓ திறமை, உறுதிப்பாடு மற்றும் தடகள வீரம் ஆகியவற்றின் குறிப்பிடத்தக்க வெளிப்படுத்தலில் பாரிஸ் 2024 பாராலிம்பிக்ஸில் இந்திய விளையாட்டு வரலாற்றின் சுமித் ஆண்டில் தனது பெயரைப் பதிவு செய்தார்.
- ✓ 26 வயதான பாரா தடகள வீரர், ஆண்களுக்கான ஈட்டி எறிதல் எப் 64 பிரிவில் தங்கப் பதக்கத்தை வென்றது மட்டுமன்றி, தனது பாராலிம்பிக் பட்டத்தை வெற்றிகரமாகப் பாதுகாத்த முதல் இந்திய ஆண் பாரா-தடகள வீரர் என்ற பெருமையையும் பெற்றார்.

➢ **2026 ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் யோகாசனம், ஒரு செயல்விளக்கப் போட்டியாக சேர்த்துக் கொள்ளப்பட உள்ளது**

- ✓ பாரம்பரிய இந்திய விளையாட்டுகளுக்கான குறிப்பிடத்தக்க வளர்ச்சியில், யோகாசனம் ஜப்பானின் ஐக்கி – நாகோயாவில் (Aichi-Nagoya) நடைபெறவுள்ள 2026 ஆசிய

விளையாட்டுப் போட்டிகளில் அதிகாரப்பூர்வமாக ஒரு செயல்விளக்க விளையாட்டாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.




- ✓ இந்த முடிவு யோகாவை சர்வதேச அரங்கில் ஒரு போட்டித் தடகள விளையாட்டாக அங்கீகரிப்பதில் ஒரு முக்கிய தருணத்தைக் குறிக்கிறது.

## ➢ ஆடவர் ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் கோப்பையை இந்தியா வென்றது

- ✓ ஹர்மன் பிரீத் சிங் தலைமையிலான இந்திய ஆடவர் ஹாக்கி அணி, இறுதிப் போட்டியில் போட்டியை நடத்திய சீனாவை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி சாதனை நிகழ்வாக ஐந்தாவது முறையாக ஆடவர் ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபியை வென்றது.




- ✓ 8வது ஆடவர் ஆசிய சாம்பியன்ஸ் டிராபி 2024இன் இறுதிப் போட்டி ஹுலுன்புயர் நகரில் உள்ள மோகி ஹாக்கி பயிற்சி தளத்தில் நடைபெற்றது.
- ✓ நடப்பு சாம்பியனான இந்தியா இதற்கு முன்பு 2011, 2016, 2018 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளிலும் கோப்பையை வென்றிருந்தது.

## ➢ 2024 செஸ் ஒலிம்பியாட்டில் இந்தியாவின் வரலாற்று வெற்றி

- ✓ 2024ஆம் ஆண்டு ஹங்கேரியின் புடாபெஸ்டில் நடைபெற்ற செஸ் ஒலிம்பியாட் இந்திய விளையாட்டு வரலாற்றில் தன்னைப் பதிவு செய்து கொண்டது.




- ✓ இதுவரை இல்லாத சாதனையாக, இந்திய ஆடவர் மற்றும் பெண்கள் அணிகள், தத்தம் பிரிவுகளில் தங்கப் பதக்கங்களை வென்றன. இது நாட்டில் சதுரங்கத்தின் ஒருமுக்கியமான தருணத்தைக் குறிப்பதாக உள்ளது.
- ✓ இரு இந்திய அணிகளும் தீர்க்கமான இறுதிச் சுற்றில் தங்களது திறமையை வெளிப்படுத்தின.

# நினைவில் நின்றவர்கள்

➢ **புகழ்பெற்ற ஆங்கிலப் பேராசிரியரும் மொழிபெயர்ப்பாளருமான கே. செல்லப்பன்**




✓ ரவீந்திரநாத் தாகூரின் கோராவை தமிழில் மொழிபெயர்த்ததற்காக சாகித்ய அகாடமி விருது பெற்ற பிரபல ஆங்கிலப் பேராசிரியர் கே. செல்லப்பன், தனது 88 வது வயதில் சென்னையில் திங்கட்கிழமை அன்று காலமானார்.

✓ கல்வி வட்டாரங்களில், கே.சி என்று அன்புடன் அழைக்கப்பட்ட அவர் 2020-இல் மொழிபெயர்ப்புக்கான விருதைப் பெற்றார்.

➢ **புகழ்பெற்ற இயற்கை விவசாயி, பாப்பம்மாள், 109 வயதில் காலமானார்.**

✓ கோவை மாவட்டம், தேக்கம்பட்டியில் வசிப்பவரும் பத்ம விருது வென்றவரும் இயற்கை விவசாயியுமான பாப்பம்மாள் தனது 109வது வயதில் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.



✓ அவர் முதுமை தொடர்பான நோயால் இறந்தார். ரங்கம்மாள் என்கிற பாப்பம்மாள், தேவலாபுரம் கிராமத்தில் மருதாச்சல முதலியார் - வேலம்மாள் தம்பதியருக்கு 1914ஆம் அண்டு மகளாகப் பிறந்தார்.

✓ அவரது குடும்ப உறுப்பினர்களின் கூற்றுப்படி, அவர் தேக்கம்பட்டியில் கிட்டத்தட்ட 14 ஏக்கரில் இயற்கை விவசாயத்தைத் தொடங்கி 2.5 ஏக்கராகக் குறைத்தார்.

✓ 2021இல் பத்மஸ்ரீ விருதைப் பெற்றார்.

# தரவரிசைப் பட்டியல்

➢ **உலகின் சிறந்த நாடாக சுவிட்சர்லாந்து தேர்வு செய்யப்பட்டுள்ளது.**




- ✓ ‘2024ஆம் ஆண்டிற்கான சிறந்த நாடுகள்’ என்ற புதிய கணக்கெடுப்பில், சுவிட்சர்லாந்து உலகின் சிறந்த நாடாகத் தேர்வு செய்யப்பட்டது.
- ✓ சுவிட்சர்லாந்து தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இந்தச் சாதனையை நிகழ்த்தியது.
- ✓ இந்தியா, கடந்த ஆண்டை விட 3 இடங்கள் சரிந்து 33 வது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

➢ **உலகளாவிய இணைய பாதுகாப்புக் குறியீடு 2024இல் (Global CyberSecurity Index 2024) இந்தியா முதல் அடுக்குக்கு முன்னேறியுள்ளது**




- ✓ நாட்டின் இணைய பாதுகாப்புக் கடமைகளின் ஒரு பகுதியாகவும், அதன் தாக்கத்தின் அடிப்படையிலும், சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியத்தால் வெளியிடப்பட்ட உலகளாவிய இணைய பாதுகாப்புக் குறியீட்டில் 2024இல் இந்திய முதல் அடுக்குக்கு முன்னேறியுள்ளது.
- ✓ உலகளாவிய இணைய பாதுகாப்புக் குறியீடு (Global Cybersecurity Index) என்பது பிரச்சினையின் முக்கியத்துவம் மற்றும் பல்வேறு பரிமாணங்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, உலகளாவிய அளவில் இணைய பாதுகாப்பிற்கான நாடுகளின் அர்ப்பணிப்பை அளவிடும் நம்பகமான குறிப்பு ஆகும்.
- ✓ இணைய பாதுகாப்பு என்பது பல தொழில்கள் மற்றும் பல்வேறு துறைகளையும் தாண்டி பரந்த அளவிலான பயன்பாட்டுத் துறையைக் கொண்டுள்ளது.

➢ **மாநில உணவு பாதுகாப்புக் குறியீடு (State Food Safety Index)**

✓ 2024 மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீட்டில் கேரளா முதலிடத்தைப் பிடித்துள்ளது. கேரளா, தமிழ்நாடு மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநிலங்கள் பாதுகாப்புக் குறியீடு அடிப்படையில் 2024இல் முதல் 3 இடங்களைப் பிடித்துள்ளன.




✓ மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீடு (State Food Safety Index) இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் (Food Safety and Standards Authority of India -FSSAI) வெளியிடப்பட்டுள்ளது.

✓ உலகளாவிய உணவு பாதுகாப்பு ஒழுங்குமுறை உச்சி மாநாட்டின் தொடக்க அமர்வில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

✓ இந்தக் குறியீடு மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களை பின்வரும் ஐந்து அளவுருக்களின் அடிப்படையில் மதிப்பிடுகிறது. அவை: மனித வளங்கள் மற்றும் நிறுவன தரவு, இணக்கம், உணவு சோதனை உட்கட்டமைப்பு மற்றும் கண்காணிப்பு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு மற்றும் நுகர்வோருக்கு அதிகாரமளித்தல்.

➢ **ஆசிய சக்தி குறியீட்டில் இந்தியா ஜப்பானை விஞ்சி மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது**

✓ கோவிட்-19 பெருந்தொற்றுக்குப் பிறகு, தன் வலுவான பொருளாதார மீட்சியை பிரதிபலிக்கும் வகையில், லோவி நிறுவனத்தின் அறிக்கையின்படி, ஆசிய சக்திக் குறியீட்டில் இந்தியா மூன்றாவது இடத்திற்கு உயர்ந்துள்ளது.



- ✓ இந்த உயர்வானது ஜப்பானை விஞ்சுவதற்கு இந்தியாவை அனுமதித்துடன் பிராந்திய சக்தியில் அதன் வளர்ந்து வரும் பங்கை எடுத்துக் காட்டுவதாகவும் உள்ளது.
- ✓ ஆசிய சக்தி குறியீடு, ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்தில் உள்ள 27 நாடுகளின் செல்வாக்கு மற்றும் அதிகாரத்தை அளவிடுகிறது.
- ✓ ஆசிய சக்தி குறியீட்டில் முதல் மூன்று நாடுகள் மற்றும் அவை பெற்ற புள்ளிகள்: அமெரிக்கா – 81.7, சீனா - 72.7, இந்தியா – 39.1

### ➢ உலகளாவிய புதுமை குறியீடு (Global Innovation Index) 2024

- ✓ 2024ஆம் ஆண்டுக்கான உலகளாவிய புதுமைக் குறியீட்டில் மொத்தம் உள்ள 133 நாடுகளில் இந்தியா 39வது இடத்தைப் பெற்றுள்ளது.




- ✓ கடந்த ஆண்டு உலகளாவிய புதுமைக் குறியீட்டில் இந்தியா 40வது இடத்தில் இருந்தது.
- ✓ உலக அறிவுசார் சொத்து அமைப்பு உலகளாவிய புதுமைக் குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- ✓ உலகளாவிய புதுமைக் குறியீடு என்பது அரசுகள் அந்தந்த நாடுகளில் உள்ள புதுமைகள் சார்ந்த சமூக மற்றும் பொருளாதார மாற்றங்களை மதிப்பிடுவதற்கான ஒரு கருவியாகும்.
- ✓ சுவிட்சர்லாந்து, ஸ்வீடன் மற்றும் அமெரிக்கா ஆகியவை உலகின் மிகவும் புதுமையான பொருளாதாரங்கள் ஆகும்.

# முக்கிய தினங்கள்

| நாள் | தினம் | கருப்பொருள் |
|---|---|---|
| செப்டம்பர் 1-7 | தேசிய ஊட்டச்சத்து வாரம் | மையக்கருத்து: ஆரம்பத்தில் இருந்து சிறப்பாக ஊட்டமளித்தல். |
| செப்டம்பர் 2 | உலக தேங்காய் தினம் | உலக தேங்காய் தினம் 2024ன் கருப்பொருள் ஒரு வட்டப் பொருளாதாரத்திற்கான தேங்காய்: அதிகபட்ச மதிப்புக்கான கூட்டாண்மையை உருவாக்குதல் என்பதாகும். |
| செப்டம்பர் 5 | தேசிய ஆசிரியர் தினம் | சிறந்த ஆசிரியரும் இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவருமான டாக்டர். சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் பிறந்த நாளை இந்த நாள் கொண்டாடுகிறது |
| செப்டம்பர் 5 | சர்வதேச தொண்டு நாள் | சிறந்த சமூக செயற்பாட்டாளர் அன்னை தெரசா மறைந்த தினத்தை நினைவுகூறும் வகையில் சர்வதேச தொண்டு நாள் செப்டம்பர் 5 அன்று அனுசரிக்கப்படுகிறது. |
| செப்டம்பர் 7 | உலக டுச்சேன் விழிப்புணர்வு தினம் | டுச்சேன் தசைநார் சிதைவு என்பது தொடர்ச்சியான தசைச் சிதைவு மற்றும் பலவீனத்தால் அறியப்படும் ஒரு அரிய மரபணுக் கோளாறு ஆகும். |
| செப்டம்பர் 7 | நீல வானத்துக்கான சர்வதேச சுத்தமான காற்று தினம் | #CleanAirNow-இல் முதலீடு செய்யுமாறு அரசுகள், பெருநிறுவனங்கள், குடிமைச் சமூகம் மற்றும் தனிநபர்களை வலியுறுத்தும் நடவடிக்கைக்கான உலகளாவிய அழைப்பாக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. |
| செப்டம்பர் 8 | சர்வதேச எழுத்தறிவு தினம் | 2024ஆம் ஆண்டுக்கான சர்வதேச எழுத்தறிவு தினத்தின் கருப்பொருள் ‘பன்மொழிக் கல்வியை ஊக்குவித்தல்: பரஸ்பர புரிதல் மற்றும் அமைதிக்கான எழுத்தறிவு’ என்பதாகும். |
| செப்டம்பர் 8 | உலக உடல் சிகிச்சை தினம் | மையக் கருத்து 2024 – கீழ் முதுகு வலி மற்றும் அதன் தடுப்பு மற்றும் அதற்கு சிகிச்சையளிப்பதில் இயன்முறை மருத்துவத்தின் பங்கு. |
| செப்டம்பர் 10 | உலக தற்கொலை தடுப்பு தினம் | 2024-26 உலக தற்கொலை தடுப்பு தினத்தின் கருப்பொருள் ‘தற்கொலை பற்றிய கதையை மாற்றுதல்’ என்பதாகும். |

| | | |
|---|---|---|
| செப்டம்பர் 11 | தேசிய வன தியாகிகள் தினம் | மையக் கருத்து 2024 – எங்கள் வனத்தின் பாதுகாவலர்களைக் கௌரவித்தல் |
| செப்டம்பர் 14 | உலக முதலுதவி தினம் | மையக் கருத்து 2024 – முதலுதவி மற்றும் விளையாட்டு |
| செப்டம்பர் 15 | தேசிய பொறியாளர்கள் தினம் | 2024ஆம் ஆண்டு தேசிய பொறியாளர்கள் தின மையக் கருத்து: 'நிலையான எதிர்காலத்திற்கான புதுமை' என்பதில் கவனம் செலுத்துகிறது. |
| செப்டம்பர் 15 | சர்வதேச ஜனநாயக தினம் | 2024ஆம் ஆண்டு சர்வதேச ஜனநாயக தினத்தின் கருப்பொருள், 'அனைத்து மட்டங்களிலும் செயற்கை நுண்ணறிவின் பயனுள்ள நிர்வாகத்தை உறுதி செய்தல்' என்பதாகும். |
| செப்டம்பர் 16 | சர்வதேச தலையீட்டு இருதயவியல் தினம் | இந்த நாள் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், குறைந்த அளவு அறுவை சிகிச்சைமூலம் இதய நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதில் விழிப்புணர்வின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காகவும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. |
| செப்டம்பர் 16 | உலக ஓசோன் தினம் | 2024ஆம் ஆண்டின் கருப்பொருளாகிய, 'வாழ்க்கைக்காக ஓசோன்: 35 வருட உலகளாவிய ஒத்துழைப்பு' கொள்கைகள் மற்றும் நிலையான செயல்பாடுகள் மூலம் இந்த முக்கிய வளிமண்டலக் கவசத்தைப் பாதுகாப்பதற்கான உலகளாவிய முயற்சிகளில் கவனம் செலுத்துகிறது. |
| செப்டம்பர் 17 | உலக நோயாளி பாதுகாப்பு தினம் | இந்த ஆண்டின் கருப்பொருள், 'நோயாளியின் பாதுகாப்பிற்காக நோயறிதலை மேம்படுத்துதல்' மற்றும் 'அதைச் சரியாகப் பெறுங்கள், பாதுகாப்பாகச் செய்யுங்கள்' என்பதாகும். |
| செப்டம்பர் 18 | உலக மூங்கில் தினம் | மையக் கருத்து 2024 – அடுத்த தலைமுறை மூங்கில்: தீர்வு, புதுமை மற்றும் வடிவமைப்பு. |
| செப்டம்பர் 18 | சர்வதேச சம ஊதிய தினம் | மையக் கருத்து 2024 – ஊதிய பாகுபாட்டை நீக்க வேண்டிய அவசியம் |
| செப்டம்பர் 20 | உலக தூய்மை தினம் | மையக் கருத்து: ஆர்க்டிக் நகரங்கள் மற்றும் கடல் குப்பைகள் என்பதாகும். |

| | | |
|---|---|---|
| செப்டம்பர் 21 | சர்வதேச அமைதி தினம் | மையக் கருத்து: அமைதிக்கான நடவடிக்கைகள்: அமைதியை வளர்ப்பதற்கான நமது கூட்டு மற்றும் தனிப்பட்ட கடமைகளை அடிக்கோடிட்டுக் காட்டும் #Global Goals-க்கு நமது அர்ப்பணிப்பு |
| செப்டம்பர் 21 | உலக அல்சைமர் தினம் | 2024ஆம் ஆண்டு உலக அல்சைமர் தினத்திற்கான கருப்பொருள் 'டிமென்ஷியாவில் செயல்பட வேண்டிய நெரம், அல்சைமர் நோயில் செயல்பட வேண்டிய நேரம்' என்பதாகும். |
| செப்டம்பர் 22 | உலக காண்டாமிருக தினம் | 2024க்கான மையக் கருத்து – ஐந்தை உயிர்ப்புடன் வைத்திருங்கள். |
| செப்டம்பர் 23 | சர்வதேச சைகை மொழி தினம் | சர்வதேச சைகை தினத்தின் மையக் கருத்து, ' சைகை மொழி உரிமைகளுக்காக பதிவு செய்யுங்கள்' என்பதாகும். |
| செப்டம்பர் 24 | உலக கொரில்லா தினம் | உலக கொரில்லா தினம். கொரில்லாக்களைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளவும், அவற்றைப் பாதுகாக்க வேலை செய்யவும் நம்மை ஊக்குவிக்கிறது. |
| செப்டம்பர் 25 | உலக மருந்தாளுனர் தினம் | மையக் கருத்து 2024: மருந்தாளுநர்கள்: உலகளாவிய சுகாதாரத் தேவையைப் பூர்த்தி செய்கிறார்கள். |
| செப்டம்பர் 26 | உலக கடல்சார் தினம் | மையக் கருத்து: எதிர்காலத்தை வழிநடத்துதல்: பாதுகாப்பு முதலில். |
| செப்டம்பர் 26 | உலக சுற்றுச் சூழல் சுகாதார தினம் | 2024ஆம் ஆண்டு உலக சுற்றுச் சூழல் சுகாதார தினத்தின் கருப்பொருள், 'சுற்றுச் சூழல் ஆரோக்கியம்: பேரிடர் அபாயத்தைக் குறைத்தல் மற்றும் காலநிலை மாற்றத்தைத் தணித்தல் மற்றும் தழுவல் மூலம் மீள்தன்மையுள்ள சமூகங்களை உருவாக்குதல்' என்பதாகும். |
| செப்டம்பர் 27 | உலக சுற்றுலா தினம் | 2024 உலக சுற்றுலா தினத்தின் கருப்பொருள், 'சுற்றுலா மற்றும் அமைதி' என்பதைப் பிரதிபலிக்கிறது. |
| செப்டம்பர் 28 | அனைவருக்கும் தகவல் அணுகலுக்கான சர்வதேச தினம் | மையக் கருத்து: செயற்கை நுண்ணறிவு, மின் ஆளுமை மற்றும் தகவல் அணுகல் |
| செப்டம்பர் 28 | உலக வெறிநாய்க்கடி நோய் தினம் | 2024ஆம் ஆண்டின் கருப்பொருள், 'வெறிநாய்க்கடி நோய் எல்லைகளை |

| | | |
|---|---|---|
| | | உடைத்தல்’. வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டில் தற்போதைய நிலையைத் தாண்டி முன்னேற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. |
| செப்டம்பர் 29 | உலக இதய தினம் | 2024முதல் 2026 வரை பிரச்சாரமானது, ‘செயலுக்கு இதயத்தைப் பயன்படுத்து’ என்ற கருப்பொருளில் கவனம் செலுத்தும் |
| செப்டம்பர் 30 | சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் | மையக் கருத்து, ‘மொழிபெயர்ப்பு, பாதுகாக்க வேண்டிய கலை: உள்நாட்டு மொழிகளுக்கான தார்மீக மற்றும் பொருள் உரிமைகள்’ என்பதாகும். |

APOLLO STUDY CENTRE

# இதர செய்திகள்

➢ **ஆஸ்கார் 2025க்கான இந்தியாவின் அதிகாரப்பூர்வ நுழைவாக 'லாபதா லேடீஸ்' (Laapataa Ladies) தேர்வு செய்யப்பட்டது**

✓ இந்திய திரைப்படக் கூட்டமைப்பு (The Film Federation of India) 'லாபதா லெடீஸ்' என்ற திரைப்படத்தை ஆஸ்கார் 2025-க்கான இந்தியாவின் அதிகாரப்பூர்வ நுழைவு என்று அறிவித்துள்ளது.




✓ இந்தத் திரைப்படத்தை அமீர்கான் தயாரித்துள்ளார், கிரண் ராவ் இயக்கியுள்ளார்.

✓ ஆஸ்கார் 2025க்கான சிறந்த வெளிநாட்டுத் திரைப்படப் பிரிவில் இது கலந்து கொள்கிறது.

✓ லாபதா லேடீஸ் என்பது இரண்டு இளம் புதுமணப் பெண்களின் கதையாகும். அவர்கள் தங்கள் கணவரின் வீட்டுக்கு இரயிலில் பயணம் செய்யும்போது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

# CURRENT AFFAIRS - TNPSC ORIGINAL QUESTIONS & ANSWERS EXAMS CONDUCTED IN JULY AND SEPTEMBER 2024

## TNPSC COMBINED CIVIL SERVICES EXAMINATION- IN GROUP I-B AND I-C SERVICES (DEO) - 12/07/2024

# UNIT – II - CURRENT EVENTS

## Latest diary of events

1. Match the following:

| Name of the Policy | Year of announcement |
|---|---|
| A. Port Policy | 1. 1997 |
| B. Boot Policy | 2. 2019 |
| C. Ship Building Policy | 3. 1995 |
| D. Ship Recycling Act | 4. 2010 |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | **3** | **1** | **4** | **2** |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 2 | 4 | 1 | 3 |

e. Answer not known

கீழ்கண்டவற்றைப் பொருத்துக

| கொள்கை பெயர் | அறிவிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|
| A. துறைமுகக் கொள்கை | 1. 1997 |
| B. பூட் கொள்கை | 2. 2019 |
| C. கப்பல் கட்டும் கொள்கை | 3. 1995 |
| D. கப்பல் மறுசுழற்சி சட்டம் | 4. 2010 |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | **3** | **1** | **4** | **2** |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 2 | 4 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

## Profile ofStates

2. Atpadi Conservation Reserve is a new Conservation Reserve of which State?
   a. Bihar  b. Rajasthan  **c. Maharashtra**
   d. Andhra Pradesh  e. Answer not known
   அட்பாடி பாதுகாப்புக் காப்பகம் எந்த மாநிலத்தின் புதிய பாதுகாப்புக் காப்பகம்?
   a. பீகார்  b. ராஜஸ்தான்  c. மகாராஷ்ட்ரா
   d. ஆந்திரப் பிரதேசம்  e. விடை தெரியவில்லை

## Books and authors

3. Match the following correctly:

| Name of Author | Name of the Book |
|---|---|
| A. Romesh Bhattacharji | 1. Gandhi: A life in three campaign |
| B. Manoj Mukund Nara vane | 2. Artificial Intelligence and National Security |
| C. M.J. Akbar andK. Natwar Singh | 3. Four stars of Destiny |
| D. Amit Sinha and Vijay Khare | 4. Kashmir: Travels in Paradise on Earth |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 4 | 3 |
| b. | **4** | **3** | **1** | **2** |
| c. | 2 | 4 | 3 | 1 |
| d. | 3 | 1 | 2 | 4 |

e. Answer not known

கீழ்கண்டவற்றைப் பொருத்துக

| நூலாசிரியர் | படைப்பு |
|---|---|
| A. ரோமேஷ் பட்டாச்சார்ஜி | 1. காந்தி: மூன்று பரப்புரைகளில் வாழ்வு |
| B. மனோஜ் முகுந்த் நரவானே | 2. செயற்கை நுண்ணறிவும், தேசப் பாதுகாப்பு |
| C. M.J. அக்பர் மற்றும் K. நட்வர் சிங் | 3. நான்கு நட்சத்திர இலச்சினைவிதி |
| D. அமித் சின்க மற்றும் விஜய் காரே | 4. காஷ்மீர்: பூலோக சொர்க்கத்தில் பயணங்கள் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 4 | 3 |
| b. | **4** | **3** | **1** | **2** |
| c. | 2 | 4 | 3 | 1 |
| d. | 3 | 1 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

4. Match the following type:
Match correctly the authors with their corresponding books.

| | |
|---|---|
| A. Ambedkar: A Life | 1. T.N. Seshan |
| B. Come ! Let's Run | 2. Shashi Tharoor |
| C. Victory city | 3. Ma. Subramanian |
| D. Through the broken glass | 4. Salman Rushdie |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | **2** | **3** | **4** | **1** |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 4 | 1 | 2 | 3 |

e. Answer not known

கீழ்கண்டவற்றைப் பொருத்துக
நூலாசிரியர்களை அவர்கள் எழுதிய புத்தகங்களுடன் சரியாகப் பொருத்தவும்.

| | |
|---|---|
| A. அம்பேத்கர்: ஒரு வாழ்க்கை | 1. T.N. சேஷன் |
| B. Come ! Let's Run | 2. சசி தரூர் |
| C. Victory city | 3. மா. சுப்பிரமணியன் |
| D. Through the broken glass | 4. சல்மான் ருஷ்டி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | **2** | **3** | **4** | **1** |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 4 | 1 | 2 | 3 |

e. விடை தெரியவில்லை

## Welfare orientedGovernment schemes and their utility

5. The basic aim of "One District One Product" Scheme initiated by the Government of India
   a. To create employment opportunities and enhance the income of urban women entrepreneurs
   b. To create employment opportunities and enhance the income of elders
   **c. To create employment opportunities and enhance the income of rural artisans and entrepreneurs**
   d. To create employment opportunities and skill enhance the rural youths
   e. Answer not known

இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட “ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு” திட்டத்தின் அடிப்படை நோக்கம்

a. வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் நகர பெண் தொழில் முனைவோர்களின் வருமானத்தை அதிகரித்தல்

b. வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் பெரியோர்களின் வருமானத்தை அதிகரித்தல்

c. வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் கிராமப்புற கைவினைஞர்கள் மற்றும் தொழில் முனைவோரின் வருமானத்தை அதிகரித்தல்

d. வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் கிராமப்புற இளைஞர்களின் திறமையை அதிகரித்தல்

e. விடை தெரியவில்லை

6. How many common Health conditions are screened with children under Rastriya Bal Swasthya Karyakram?

a. 30 **b. 32** c. 24 d. 34 e. Answer not known

ராஷ்டிரிய பால் ஸ்வஸ்திய கார்யகிராமின் கீழ் குழந்தைகளுக்கு எத்தனை பொதுவான உடல்நிலைகள் பரிசோதிக்கப்படுகின்றன?

a. 30 b. 32 c. 24 d. 34 e. விடை தெரியவில்லை

7. For the “Scheme of Breakfast” the common kitchen at -------- in Madurai.

**a. Nelpettai** b. Periyakulam c. Aarapalayam

d. Maatuthavani e. Answer not known

காலை சிற்றுண்டி திட்டத்தின் கீழ் பொது சமையலறை மதுரையில் எங்குள்ளது?

a. நெல்பேட்டை b. பெரியகுளம் c. ஆரப்பாளையம்

d. மாட்டுத்தாவணி e. விடைதெரியவில்லை

## Awards and Honours

8. Name the Indian Music band which won Grammy awards 2024

a. Bharatham b. Keetham c. Ritham **d. Sakthi** e. Answer not known

2024 - கிராமிய விருதை வென்ற இந்திய இசைக்குழுவின் பெயர் என்ன?

a. பாரதம் b. கீதம் c. ரிதம் d. சக்தி e. விடை தெரியவில்லை

9. The Economist, who received the Malcolm Adiseshiah Award for 2023.

a. Ramachandra Guha b. K. Ramasamy **c. Utsa Patnaik**

d. Joida Gupta e. Answer not known

2023 ஆண்டிற்கான மால்கம் ஆதிசேசய்யா விருதை வென்ற பொருளியல் நிபுணர்.

a. ராமச்சந்திர குஹா b. K. ராமசாமி c. உத்சா பட்நாயக்

d. ஜோயிதா குப்தா e. விடை தெரியவில்லை

10. Who received Padma Shri award from Tamil Nadu in the year 2022 for the achievement in the field of arts?

a. Tmt. Padmasubramaniam | **b. Tmt. Muthukannammal**
c. Selvi. Shobana | d. Tmt. Chitra
e. Answer not known

கலைத்துறையில் சாதனை படைத்ததற்காக 2022-ம் ஆண்டில் தமிழகத்திலிருந்து பத்ம ஸ்ரீ விருதைப் பெற்றவர் யார்?

a. திருமதி. பத்மா சுப்ரமணியம் | b. திருமதி. முத்து கண்ணம்மாள்
c. செல்வி. ஷோபனா | d. திருமதி. சித்ரா
e. விடை தெரியவில்லை

## Science

11. What are Iris' and 'Massalia'?

**a. Asteroids** | b. Black holes | c. Glacial lakes
d. Patrol vessels | e. Answer not known

''ஐரிஸ்" மற்றும் "மசாலியா" என்றால் என்ன?

a.சிறு கோள்கள் | b. கருந்துளைகள் | c. பனிப்பாறை ஏரிகள்
d. ரோந்து கப்பல்கள் | e. விடை தெரியவில்லை

## Sports

12. Choose the right matches among type:

1. Sportstar ACES Award 2024 - Rohan Bopanna and Joshna Chinappa
2. National Creators Awards 2024 -Abhi and Niyu
3. Padma Shri Awards 2024 - Mohammed Shami
4. Khel Rathna Award 2024 -Satwik Sairaj Ranki Reddy and Chirag Shetty

a. 1 and 3 are correct | b. 2 and 3 are correct | **c. 2 and 4 are correct**
d. 3 and 4 are correct | e. Answer not known

சரியான விடையை தேர்ந்தெடுத்துபொருத்துக:

1. ஸ்போர்டஸ்ஸ்டார் ACES விருது 2024 - ரோகன் போபண்ணா மற்றும் ஜோசுனா சின்னப்பா
2. நேசனல் கிரியேட்டாஸ் விருது 2024 - அபி மற்றும் நியு
3. பத்ம ஸ்ரீ விருது 2024 - முகமது ஷமி
4. கேல் ரத்னா விருது 2024 - சாத்விக் சாய்ராஜ் ராங்கி ரெட்டி மற்றும் சிராஜ்செட்டி

a. 1 மற்றும் 3 சரி | b. 2மற்றும் 3 சரி | c. 2மற்றும் 4 சரி
d. 3 மற்றும் 4 சரி | e. விடை தெரியவில்லை

## Latest inventions in Science and Technology

13. Choose the correct match:

| Name of the organization | Name of the vaccine |
|---|---|
| 1. Pfizer company of America and German – Biotech | - MRNA-1273 |
| 2. Moderna of America | - BNT162b2 |
| 3. Bharath Biotech India | - Covaxin |
| 4. Russian company | - Sputnik – V |

a. 1 and 2 only **b. 3 and 4 only** c. 2 and 3 only
d. 1 and 4 only e. Answer not known

கீழ்கண்டவற்றுள் சரியான பொருத்தத்தைத் தேர்வு செய்க:

| நிறுவனங்களின் பெயர் | தடுப்பூசியின் பெயர் |
|---|---|
| 1. பைசர் கம்பெனி அமெரிக்கா மற்றும் ஜெர்மன் - பயோடெக் | - MRNA-1273 |
| 2. மாடர்னா அமெரிக்கா கம்பெனி | - BNT162b2 |
| 3. பாரத் பயோடெக் இந்தியா | - கோவாக்சின் |
| 4. ரஷ்யா கம்பெனி | - ஸ்புட்னிக் - வி |

a. 1 மற்றும் 2 மட்டும் b. 3 மற்றும் 4 மட்டும் c. 2 மற்றும் 3 மட்டும்
d. 1 மற்றும் 4 மட்டும் e. விடை தெரியவில்லை

## Others

14. The Nature of Data in Google's Magenta is
**a. Music** b. Audio c. Text
d. Text and Images e. Answer not known

கூகுளின் மகெண்டாவில் உள்ள தரவின் வகை
a.இசை b. ஒலி c. உரை
d. உரை மற்றும் படங்கள் e. விடை தெரியவில்லை

## UNIT – II - CURRENT EVENTS

### Latest diary of events

1. "Tamil Nadu Day" celebrated every year on
a. June 8 b. June 18 c. July 8 **d. July 18** e. Answer not known

'தமிழ்நாடு தினம்' ஒவ்வொரு வருடமும் இந்த தினத்தில் கொண்டாடப்படுகிறது
a. ஜுன் 8 b. ஜுன் 18 c. ஜுலை 8
d. ஜுலை 18 e. விடைதெரியவில்லை

### Sports

2. Which of the following is correctly paired?
1. 2014 -Target Olympic Podium Scheme
2. 2023 - Mera Yuva Bharat (MY Bharat)
3. 1982 - Sports Authority of India (SAI)
4. 1984 - Dronacharya Award was instituted

a. Only 3 is correct **b. 1 and 2 are correct** c. Only 4 is correct
d. 3 and 4 are correct e. Answer not known

கீழ்க்கண்டவற்றில் சரியாகப் பொருத்தப்பட்ட இணை எவை?
1. 2014 – ஒலிம்பிக் மேடை இலக்குத் திட்டம்
2. 2023 - எனது இளைய பாரதம் (MY பாரத்)
3. 1982 - இந்திய விளையாட்டு ஆணையம் (SAI)
4. 1984 – துரோணாச்சாரியார் விருது நிறுவப்பட்டது

a. (3) மட்டும் சரி b. (1) மற்றும் (2) சரி c. (4) மட்டும் சரி
d. (3) மற்றும் (4) சரி e. விடைதெரியவில்லை

### Economics

1. In which year Flipkart signed a memorandum of understanding with the Tamil Nadu MSME Trade and Investment Promotion Bureau?
**a. 2021** b. 2018 c. 2001 d. 2011 e. Answer not known

எந்த ஆண்டு பிளிப்கார்ட், தமிழ்நாடு MSME வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு புரிந்துணர்வு பணியகத்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?
a. 2021 b. 2018 c. 2001 d. 2011 e. விடைதெரியவில்லை

## Awards and Honours

2. Who had been given the "Shilp Awards" by the Ministry of Textiles and Industry?

a. To legendary drama artists  b. To rural women entrepreneurs
c. To legendary farmers  d. **To legendary crafts persons**
e. Answer not known

ஜவுளி மற்றும் தொழில்துறை அமைச்சகத்தால் சில்ப் விருதுகள் யாருக்கு வழங்கப்படுகிறது?

a. புகழ்பெற்ற நாடகக் கலைஞர்களுக்கு  b. கிராமப்புற பெண் தொழில்முனைவோர்
c. புகழ்பெற்ற விவசாயிகள்  d. புகழ்பெற்ற கைவினைக் கலைஞர்கள்
e. விடைதெரியவில்லை

## Latest inventions in Science and Technology

3. ISRO prefer to launch Human space flight mission during 75th independence, the (crew member) explorer is named as

a. Astronaut  b. Cosmonaut  **c. Gagannaut**
d. Ganganaut  e. Answer not known

இந்திய விண்வெளி ஆய்வு மையத்தால் 75வது சுதந்திரத்தின் போது ஏவப்படும் மனிதனைக் கொண்டு செல்லும் விண்கலத்தின் விண்வெளிப் பயணம் மேற்கொள்ளும் குழு உறுப்பினர் எவ்வாறு அழைக்கப்படுவார்?

a. ஆஸ்ட்ரோநாட்  b. காஸ்மோநாட்  c. காகாநாட்
d. கங்காநாட்  e. விடை தெரியவில்லை

4. Inorder to double the Farmer's income through digital technologies, action should be taken from

i. Technology generation and dissemination, policies and reforms and development initiatives
ii. Policies and Reforms
iii. Reforms and Development
iv. Artificial Intelligence

**a. i only**  b. i and iv  c. ii and iii  d. iv only  e. Answer not known

டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மூலம் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க எடுக்க வேண்டிய நடவடிக்கை

i. தொழில்நுட்ப உருவாக்கம் மற்றும் பரவல், கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள்
ii. கொள்கைகளும், சீர்திருத்தங்களும்
iii. சீர்திருத்தங்களும், முன்னேற்றமும்

iv. செயற்கை நுண்ணறிவு

a. i மட்டும் b. i மற்றும் iv c. ii மற்றும் iii

d. iv மட்டும் e. விடை தெரியவில்லை

5. Which Ministry launched the Digital Intelligence platform (DIP) and ‘Chakshu’ facility on Sanchar Saathi portal?

a. Ministry of Power

b. Ministry of Civil Aviation

**c. Ministry of Communications and Information**

d. Ministry of Earth Sciences

e. Answer not known

எந்த அமைச்சகம் சஞ்சார் சாத்தி போர்ட்டலில் டிஜிட்டல் நுண்ணறிவு தளம் மற்றும் ‘சாக்ஷு‘ வசதியை தொடங்கியது?

a. மின் அமைச்சகம்

b. சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம்

c. தகவல் தொடர்பு அமைச்சகம்

d. புவி அறிவியல் அமைச்சகம்

e. விடைதெரியவில்லை